# ஜீவ மன்னா

JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER



அனுதினமும்

2013 ஜூலை

நான் மரித்தோரில் உயிர்த்தெழுந்தேன்
என்பதை என் ஜனங்களுக்கு துரிதமாகச் சொல்பவர் யார்?

உங்களுக்கும் இந்தக் கடமை இருப்பதை இன்னும்
உணராமல் இருப்பது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு கிறிஸ்துவின் அற்புத கிரியைகள்

## பாவ வாழ்விலிருந்து என்னை மீட்டார்!



பி.கே.ஏ. அமில பிரபாத் பெரேரா
வெல்லம்பிடிய

நான் 8 வருடங்களாக ஹொங்கொங் நாட்டில் இருந்தேன். நான் அங்கு சென்ற முதல் ஆறு மாதங்களுக்குள் இலங்கையில் வாழ்ந்த பாவ வாழ்க்கையிலேயே நிலைத்திருந்தேன். நான் பல பாவக் காரியங்களுக்கு அடிமைப்பட்டிருந்தேன். இப்படியான வேளையில் நீதிச்சட்டத்தின்படி அனுமதியின்றி அந்த நாட்டிற்குள் பிரவேசித்திருந்த வெளிநாட்டவரை பிடித்து வைத்திருக்கும் மத்திய ஸ்தானத்திற்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கே நேபாள சகோதரரொருவர் மூலமாக ''இயேசுகிறிஸ்துவைக்'' குறித்து அறிந்தேன். நான் அந்த இடத்தில் 2 மாதமளவில் இருந்தேன். என் வாழ்வில் முழுமையான மாற்றத்தைப் பெற்றேன்.

அதன்பிறகு ஹொங்கொங் அரசாங்கத்தில் நான் இலங்கைக்குத் திரும்பி வரும்வரை தற்காலிக விசாவைத் தந்து என்னை விடுதலை செய்தார்கள். நான் நேபாள சகோதரனுடன் அவரது சபைக்குச் சென்று தற்காலிக வேலையொன்று செய்து 6 வருடம் 4 மாதம் ஜீவித்தேன். நான் இலங்கைக்கு வரமுடியாமற் போன காரணம் நான் ஹொங்கொங் நாட்டிற்கு இன்னொரு நபரின் கடவுச்சீட்டில் வெளிநாட்டிற்கு சென்றதேயாகும். இலங்கைக்கு நான் வந்திறங்கிய உடனே விமான நிலையத்தில் என்னைக் கைது செய்து 14 நாட்கள் அல்லது 6 மாதம் சிறையில் போட்டு விடுவார்கள் என்ற பயத்துடன் இருந்தேன். ஆனாலும் எனது அம்மா சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையை கேள்விப்பட்டு 12 வாரங்கள் வந்து ஜெபித்த வேளை என் மனதிலிருந்த பயம் அகன்று இலங்கைக்கு வர என் மனதில் தைரியமேற்பட்டது. நான் விமான நிலையத்தில் அங்கே சேவை புரிந்த அதிகாரிகளிடம் எல்லா உண்மைகளையும் எடுத்துரைத்தேன். என்னை அவர்கள் விடுதலை செய்தார்கள் நான் இலங்கைக்கு வந்து 6 மாதங்கள் ஆகின்றன. நான் இப்பொழுது திருமணம் செய்துள்ளேன். எனது பாவ வாழ்வினின்று மீட்டு அழகான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்த என் இயேசுசுவாமிக்கு கோடானு கோடி ஸ்தோத்திரங்கள்.

## மார்பு புற்று நோய் சுகம்!



எம். ஜி. குமுதினி
அம்பான் பொல

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக என்னுடைய மார்பகங்களில் ஏற்பட்ட வலியின் காரணமாக சிகிச்சை பெறச் சென்றேன். அங்கே வைத்தியர்கள் என்னுடைய மார்பகங்களில் உள்ளார்ந்த பகுதிகளில் சிறு கட்டிகள் ஏற்பட்டுள்ளதாயும் அக்கட்டிகளில் புற்று நோய்க்கலங்கள் உள்ளதென்றும் கூறினார்கள் அதன்பிறகு 5 முறை அறுவை சிகிச்சையின் மூலம் மார்பகத்துனுள் இருந்த கட்டிகளை அகற்றினார்கள். நான் தொடர்ந்து வைத்தியப்பரிகாரம் செய்துக்கொண்டே இருந்தேன். மீண்டும் முன்பு போலவே மார்பகத்துனுள் கட்டிகள் ஏற்பட்டன வைத்தியர்கள் எனது மார்பகங்கள் இரண்டையும் அகற்ற வேண்டுமெனக் கூறினார்கள்.

இதற்கிடையில் சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையைக் குறித்து எனக்கு அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததோடு அதில் கலந்தும் கொண்டேன். ஒரு நாள் போதகர் மார்பகங்களில் கட்டிகள் ஏற்பட்டுள்ளதென்றும் அதற்கு சிகிச்சை பெறுகின்றீர்கள் அதற்குரிய சகோதரி மேடைக்கு முன்னே வரும்படியாக வெளிப்படுத்துதல் மூலம் அழைத்தார். அந்த வெளிப்படுத்துலின் அறிகுறி அநேகருக்கு இருந்த படியால் அவர்கள் அனைவரையும் தாம் இருக்கின்ற இடத்தில் எழும்பி நிற்கும்படியாக் கூறி விஷேசமாக ஜெபித்தார். நான் அந்த ஜெபத்திற்கு ஒருமனப்பட்டு ஜெபித்தேன். சுகம் பெற்றேன்.

மீண்டுமாக வைத்தியப் பரிசோதனைக்குச் சென்ற விடத்து வைத்தியர்கள் உங்கள் மார்பகங்களில் இப்போது கட்டிகள் இல்லை என வைத்திய அறிக்கை மூலமாக வெளிப்படுத்தினார்கள். வைத்திய பரிகாரத்தில் குணமாக்க முடியாத மார்பக புற்று நோயை 6 வாரத்தில் இலவசமாக சுகப்படுத்திய இயேசுவுக்கு என் உள்ளார்ந்த நன்றிகளை என் வாழ்நாள் முழுவதும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வ வல்லவரான தேவ பிதாவானவருக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

***பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் !***

ஜீவ மன்னா தினத்தியானங்கள் 22வது வெளியீட்டை இவ்வண்ணமாகத் தொகுத்து உங்கள் கரங்களில் கிடைக்கத் தேவன் கொடுத்த கிருபைக்காக மகா உன்னதமான தேவனுக்கு மகிமை உண்டாவதாக! சுமார் இரண்டு வருடங்களாக அநேக ஆவிக்குரிய போராட்டங்களின் மத்தியில் "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" என்று பரிசுத்த வேதாகமத்தில் கொலேசெயர் 3:2 இல் கூறியுள்ளபடி மேலான தேவ செய்திகளை ஜீவ மன்னாவிற்கூடாக உங்களுக்கு ஆகாரமாகக் கொடுத்து வந்துள்ளோம். எங்களை பெலப்படுத்தி முன்னோக்கிக் கொண்டு வந்தது எங்கள் தேவனேயாகும்.

இந்த இரு வருடங்களிலும் ஆத்மீக வாழ்க்கையில் பின் மாற்றமான அநேக சகோதர சகோதரிகளின் விலாசங்களை எமக்குக் கிடைக்கச் செய்த வாசகர்களே! உங்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். அவர்கள் ஜீவ மன்னாவை வாசித்து இயேசு கிறிஸ்துவை மகிழ்ச்சியோடு துதித்து மன்னா விமர்சனக் கடிதங்களை எங்களுக்கு எழுதி அனுப்புகின்றார்கள் என்பதை நாம் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். அத்தோடு எமது மன்னா வாசகக் கட்டணங்கள் சந்தோஷமாக எங்களுக்கு காணிக்கைகள் அனுப்பி தேவ ராஜ்ஜியத்தின் காரியங்களுக்கு ஒத்தாசை செய்யும் உங்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள். எதிர்காலத்திலும் நீங்கள் மனமகிழ்ச்சியோடு எமக்குக் கொடுக்கும் காணிக்கைகளுக்கூடாக, வாசகக் கட்டணங்களுக்கூடாக எமக்கு கரங் கொடுத்து ஒத்தாசை செய்து ஜீவ மன்னா தினத்தியானங்கள் இடைவிடாது தொடர்ந்து உங்களுக்கு தொகுத்து அளிப்பதற்காக எங்களோடிணைந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தேசத்தில் ஆத்துமீக எழுப்புதல் உருவாகவும் தேவனின் இரக்கம் இன்னும் அதிகமாக எம் தேசத்திற்கு கிடைக்கவும் நீங்கள் உங்கள் தேவனுக்கு மனதுருக்கமான ஜெபங்களை ஏறெடுக்கும் படியாகக் கேட்டுக் கொள்கின்றேன். ஜீவ மன்னாவின் மூல ஆசிரியரான எனக்காகவும் இந்த ஆவிக்குரிய காரியங்களுக்கு ஒத்தாசைபுரியும் என் ஊழிய சகோதர சகோதரிகளுக்காகவும் ஜெபிக்கும் படியாக ஞாபகப் படுத்துகின்றேன். எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் இரக்கம் உங்கள் அனைவர் மீதும் இருப்பதாக! உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக!

தேவனை அறிகின்ற அறிவு பெருகிட
நோயற்ற நீடித்த ஆயுளைப் பெற்றிட
ஜீவ மன்னாவை வாசியுங்கள்!

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவிற்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
***இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்***

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை **01**

திங்கள்

## இருதயத்தை நிறைவான மகிழ்ச்சியால் நிரப்புவார் எம் ஆத்தும நேசர் !

இன்றைய வேதவாசிப்பு


யாத்திராகமம் 31 - 32

**"அவர்களுக்குத் தானியமும் திராட்சைரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்"**
(சங்கீதம் 4:7)

புதிய கிருபையால் எம்மை நிரப்பி, புதிய நாட்களுக்குள் எம்மை நடத்தும், எமது அன்புத் தந்தை இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் உங்களை வாழ்த்தி, புதிய மாதத்தின், புதிய நாளின், உதய வேளையில் உங்களை வாழ்த்துகிறேன். பூமியும் அதன் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. என வேதாகமத்தில் சங்கீதம் 24:1 கூறுகிறது. சகல வல்லமைப் பொருந்தியவரும், ஜீவனுள்ளவராய் கிரிகை செய்யும் பரம தகப்பனைக் குறித்து அறிந்துக்கொள்ளும்படி அவரால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! பூமியும் அதின் நிறைவும் அவருடையதாக இருப்பின் அவருடைய பிள்ளைகளாகிய எங்களுக்கும் அதன் மீது உரிமையும் சொந்தமும் இருக்கிறதல்லவா?

அன்பார்ந்தவர்களே! ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ள வேத வசனம் சங்கீதம் 4:7 ல் தாவீது ராஜா கூறுகிறார் தானியமும், திராட்சை ரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும் அதின் சந்தோஷத்தை கர்த்தர் அவனுக்குள் ஏற்படுத்தியதாக. தேவ பிள்ளைகளே! ஆண்டவர் தாவீதை தேடி அவருடைய அபிஷேகத்தை கொடுத்து, இஸ்ரவேலின் ராஜாவாக நியமித்து, தாவீதோடு கூட இருந்து சகல உலக ஆசீர்வாதம், பதவி, ராஜமரியாதை கௌரவம் எல்லாம் கிடைக்கச் செய்தார். அவனுக்கு எல்லா மகிழ்ச்சியும் கிடைத்தது. ஆனால் இவைகளின் கிடைத்த மகிழ்ச்சியை பார்க்கிலும் கர்த்தரால் தன் இருதயத்தில ஏற்பட்ட அன்பின் பரிமாற்றமே சகலவற்றையும்விட மிக சந்தோஷத்தை கொடுத்தது என தாவீது ராஜா கூறுகிறார். எமக்கு, எவ்வளவு, சொத்து, சுகங்கள், வீடு, வளவு, காணி, பணம், நகைநட்டு போன்ற செல்வங்கள் எமக்கிருந்தாலும் அவைகள் பூமிக்குரியவைகள். எம் உள்ளத்தில் ஏற்படும் வேதனைகள், துன்பங்கள், யோசனைகள் ஏற்படும்போது இந்த உலக செல்வங்கள் ஆறுதலைத் தர முடியாது. ஏனெனில் உலக செல்வங்களால் ஏற்படும் மகிழ்ச்சி நிரந்தரமற்றது. பூமிக்குரியவைகள் அதி சீக்கிரமாக கைவிட்டு போய்விடும் விலகிப்போக அநேக வாய்ப்புகள் உண்டு, ஆயினும் கலங்காதிருங்கள்!

அருமையான தேவப்பிள்ளைகளே! உங்கள் உள்ளத்தின் கவலைகள், பிரச்சினைகள், யோசனைகள் யாவற்றையும் பூரணமாக உள்ளத்திலிருந்து நீக்கிவிட எம் தேவனின் அன்புக்கரங்கள் உங்களை நோக்கி நீட்டப்பட்டிருக்கிறது. அவைகள் இருதயத்திலிருந்து யாவற்றையும் நீக்கி மகிழ்ச்சியால் நிரப்பும். உலக ஆசீர்வாதங்கள் எவ்வளவு அதிகமாக காணப்பட்டாலும் சரீரத்தில் சௌக்கியம் இல்லாவிடில் உள்ளத்தின் மகிழ்ச்சி நீங்கிவிடும். ஆயினும் நோய்நொடி, துன்பம் இவைகளிலிருந்து உங்களை காத்து சுகஜீவிகளாய் வாழவைக்க உங்கள் சர்வேசுரனால் முடியும். உங்கள் பரிகாரியானவர் அவரே. பூமியின் காரியங்கள் நிலைமாறிப்போனாலும் தேவாதி தேவன் ஒருபோதும் மாறாதவர். உங்களைவிட்டு விலகாதவர். இன்னுமோர் நல்ல நாள்!



என் நல்ல தேவனே. என் இருயதயத்திற்கு மகிழ்ச்சியளிப்பவரே, இம் மண்ணின் ஆசீர்வாதங்கள் என்னை விட்டு அகன்றுபோவிடக்கூடும். நீங்கள் ஒருபோதும் என்னை விட்டு விலகமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். இன்றைய நாளிலும் இருதயத்தில் மகிழ்ச்சியை அளித்து என்னை ஆசீர்வாதமாய் வழிநடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்;
செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள். சங்கீதம் 64:10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 02

செவ்வாய்

## நிறைவேறும் இறைவார்த்தைகள் வாழ்வை சம்பூரணப்படுத்தும் !

இன்றைய வேதவாசிப்பு


யாத்திராகமம் 33 - 34

**"விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தராலே அவளுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள் "** (லூக்கா 1:45)

தேவனுக்குள் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! உயிருள்ளவைகள் யாவும் தேவனை மகிமைப்படுத்தும், ஆர்ப்பரித்து துதித்து உயர்த்தும் இந்த புதிய விடியற்காலையிலே ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் மதுரமான நாமத்தினால் நன்மை நிறைந்த நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன். ஒரு புதிய நாளை சந்திக்கும்படியாக எம் ஜீவனை காத்த தேவனை எம் படைப்பின் கர்த்தரை முழு இதயத்துடன் துதித்து ஸ்தோத்தரிப்போம். ஏனெனில் சகலநாட்களும் அவருடையது. நாட்களை உருவாக்கினவர் அவரே.

தேவ பிள்ளைகளே! இன்றைய இச்செய்தியின் ஆரம்ப வசனம் பரிசுத்த லூக்கா 1:45 வெளிப்படுத்துவது எம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் விசவாசம் கொண்டு அவரை விசுவாசிப்பவர்களுக்கு சொல்லப்பட்ட சகலவற்றையும் சம்பூரணபடுத்துவார் என்பதே பரி.லூக்கா 1:45 வசனம் யோவான் ஸ்நானகனின் தாயானவளால் இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளுக்கு சொல்லப்பட்டதாகும். ஆனாலும் அதன் அர்த்தம் இன்றும் எமக்கு உரித்தானதாகும். ஏனெனில் தேவனால் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட தேவ தூதன் "காபிரியேல்" மரியாளை நோக்கி பரிசுத்த ஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பெலன் உன்மேல் நிழலிடும். நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக என்று கூறினார். அதை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட மரியாள் உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். தேவதூதனால் உரைக்கப்பட்ட யாவும் நிறைவேறியது. காபிரியேல் என்னும் தேவதூதன் மூலமாய் தேவனானவர் கூறிய சகல வெளிப்பாடுகளும் மரியாளுடைய வாழ்வில் சம்பூர்ணமடைந்தது.

அன்பானவர்களே! கலங்காதிருங்கள். இன்றைய தினத்தில் இந்த ஜீவ மன்னா நாளாந்த தினசரி ஏட்டின் தேவசெய்திகளை வாசிக்கும் நீங்கள் யாவரும் உங்கள் சிருஷ்டிகரை விசுவாசிப்பீர்களாயின், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். உங்கள் பரலோகத் தகப்பன் உங்களைக் குறித்து நியமித்துள்ள எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுவார். உங்கள் எதிர்காலத்தை குறித்த திட்டங்கள், உயர்ந்த சித்தங்களை தேவன் கொண்டிருக்கிறார். உங்களுக்கு சரீர சுகம், சந்தோஷம், சமாதானம், நிம்மதி இவைகளை குறையாதபடி பெற்று தரும்படி வசனங்களுக்கூடாக பொருத்தனை செய்துள்ளார். அவர் உங்கள் மீது அளவுகடந்த மாறாத அன்பு கொண்டிருப்பதால் சொல்லப்பட்டவைகளை நிறைவேற்றுவார். அவர் வாயினால் வெளிப்படுத்தியவைகளை மாற்றவோ தடை செய்யவோ, ஏமாற்றவோ அவரால் கூடாது. ஆகையால் உங்களுக்கு சொல்லப்பட்டவைகள் உஙகள் வாழ்வில் நிச்சயமாக நிறைவேறும் என விசுவாசியுங்கள். விசுவாசித்தால் இன்றே உங்களுக்குள் வார்த்தைகள் சம்பூரணமடையும். இன்னுமோர் நல்ல நாள்!



*பரிசுத்தமுள்ள எம் தெய்வமே! உங்கள் வாய்மொழிகள் யாவும் இன்றும் கிரியைசெய்பவைகளாக இருப்பதை நான் அறிவேன். என்னைக்குறித்த உங்கள் திட்டங்கள் யாவும் மிகவும் நன்மையானவைகளே அதி விசேஷமானவைகளே இன்றும் உங்கள் வார்த்தைகளை எனக்குள் சம்பூரணப்படுத்தும்படியாய் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.~ஆமென்~*

---

*கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.*

*சங்கீதம் 33:4*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 03
புதன்

## பாழாக்கி விடப்பட்டு கைவிடப்பட்டுபோன எருசலேமே !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
35 - 36

**"இதோ உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்ற நீங்கள் சொல்லுமளவு இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்."**
(மத்தேயு 23:38,39)

தேவனுடைய நன்மையினாலும் கிருபையினால் நிறைந்து தேவனுக்குள் உத்தமமாய் ஜீவிக்கும் என் அருமையான நேசப்பிள்ளைகளே! இன்றும் ஆசீர்வாதங்களைப்பெற்று மகிழும்படி இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தினால் பிரார்த்திக்கிறேன். இந்த இலங்கை நாட்டில் பிறந்த சகல மக்கள் மத்தியிலும் ஜீவிக்கிற சிருஷ்டிகரைக்குறித்து அறிந்து அவரால் பாதுகாக்கும்படி அவரின் கரத்தின் மறைவிலும் செட்டைகளின் நிழலிலும் இருக்கும் அனைவரும் பேறுபெற்றோர்.

அன்பார்ந்தவர்களே! தேவனால் உருவாக்கப்பட்டவர்களாய் அவருடைய பிள்ளைகளாய் வாழும் யாவருடைய நிகழ்காலங்களையும் எதிர்காலங்களையும் அவருடைய கரத்தினால் பொறுப்பேற்றுள்ளார்கள். வேதாகமத்தின் அவருடைய சத்திய வசனங்களுக்கூடாக உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படி செய்வேன், நரை வயது மட்டும் நான் உங்களை தாங்குவேன். என வாக்களித்துள்ளார். ஆகையால் திடமனதுடையோராய் இருங்கள். தேவபிள்ளைகளே! கடந்த நாட்களில் இஸ்ரவேல் தேசத்திற்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது. நான் அங்கு செல்ல முன்னர், அத்தேசத்திலே எருசலேம் நகரம் தேவனுடைய மகிமையால் நிறைந்து காணப்படும் என்று எண்ணினேன். ஆனால் நான் அங்கு சென்ற போது அவரின் மகிமையின் பிரசன்னத்தை காண முடியவில்லை. அத்தேசங்களில் எமது மீட்பரின் பாதங்கள் நடந்து சென்ற பிரதேசங்களில் ஒரு வெறுமையையே கண்டேன். வேதாகமத்தின் வசனங்களில் வெளியிடப்பட்ட தேவ வார்த்தைகளில் காணப்படும் அந்த மகிமையின் பிரசன்னம் அவருடைய வல்லமையின் கிரியைகளை கண்ட அந்த நகரங்கள்இன்றைய நாட்களில் கைவிடப்பட்டு பாழாகிப்போய் மகிமையற்று பிரசன்னத்தை இழந்து வெறுமையாகக் காணப்படுவது போல உணர்ந்தேன். இதைக் கண்ட எனக்கு உள்ளத்திலே மாபெரும் வேதனை ஏற்பட்டது. ஏனெனில் எம் தேவ சபையில் வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனையில் தேவனுடைய வல்லமை அவருடைய மகிமை பிரசன்னத்தை மிக விசேஷ விதமாக காணக்கூடியதாக இருக்கிறது. பரத்தில் வாசம்பண்ணும் பரிசுத்த பிதாவின் வல்லமை மகிமை அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபிக்கும்போது தேவ ஆவியானவருடைய பிரசன்னத்திற்கூடாய் எம் மத்தியில் அநேக அற்புதமான வல்லமையின் கிரியைகளை நடப்பிக்கிறார்.

தேவபிள்ளைகளே! ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தாங்கள் பெற்றுக்கொண்ட அற்புதமான விடுதலையைக்குறித்து சாட்சிகளை பகிர்ந்து தங்கள் கரங்களை தட்டி ஆர்ப்பரித்து தேவனுடைய நாமத்தை நாமத்தை உயர்த்தும் காட்சிகளை எமது விடுதலை ஆராதனையில் காணலாம். ஆயினும் பரிசுத்த மத்தேயு 23:38-39 இல் சொல்லியிருக்கிற படி எருசலேம் நகரமும் அதன் ஆலயமும் பாழாய் போய் கிடக்கிறது. ஆயினும் தேவ ஆவியோடும் தாகத்தோடும் தேடுகிறவர்கள் யாரோ அவர்களுடைய தேசங்களில் சபைகளில் இல்லங்களில் அவர்களுடைய இருதயங்களில் வாசம் பண்ணுகிறார். அவர் உங்களை ஆசீர்வதிக்கிறார். வெற்றியின் நாள்.



என் அன்புத் தகப்பனே! இஸ்ரவேலின் தேவனே! எனக்கும் தேவனானவரே. ஆவியோடு உம்மை தேடுபவர்களுக்கு உம்மை வெளிப்படுத்துபவரே. நான் முழு உள்ளத்தோடும் ஆவியோடும் உங்களை தேட தயை புரிந்தருளும். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

---

அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.

2 நாளாகமம் 15:2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 04

வியாழன்

## வாழ்நாள் முழுவதும் உங்கள் சுமைகளை சுமக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 37 - 38

**"நீ படுக்கும் போது பயப்படாதிருப்பாய் நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும்."** (நீதிமொழிகள் 3:24)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுவின் இனிய நாமத்தினாலே இன்று உங்களுக்கு ஒரு நல்ல நாளாக விளங்கும்படி வாழ்த்துகிறேன். வானமும் பூமியும் படைத்தவரும் சகலவற்றையும் உருவாக்கினவரும் தம்மை நமஸ்கரிக்கவும் தமக்கு அன்பு கூறவும், தம்மால் ஆசீர்வதிக்கப்படவும் தமக்கென்று எம்மைத் தெரிந்துகொண்டு அவருடைய சந்ததிகளாய் எம்மை மாற்றிக்கொண்ட சர்வவல்லமையுள்ள பரலோக தகப்பனை அறிந்து சேவிக்கும் ஜனங்கள் அதிஷ்டசாலிகள். ஏனெனில் எமது சொந்த விருப்பத்தினாலோ, முயற்சியாலோ, பாவத்தினாலோ அல்ல அவருடைய சொந்த விருப்பத்தின்படி எம்மை அழைத்து தனக்கு கிட்டிச் சேர்த்துக்கொண்டார்.

இன்றைய நாளில் நீதிமொழிகள் 3:24 வசனத்திற்கூடாய் தேவன் உங்களோடு பேசுகிறார். தேவன் உங்களுக்கு ஆறுதலான இன்பமான நித்திரையை அருளுகிறார். "நீ படுக்கும் போது பயப்படாதிருப்பாய்" என்கிறார். தேவபிள்ளைகளே! நீங்கள் இரவில் கண்ணயரும் போது உள்ளத்தில் ஒரு பய உணர்வு ஏற்பட்டால் இரவின் மடியில் உங்களால் சுகமாய் நித்திரை கொள்ள முடியாது. இதனால் அநேக விதமான விபரீத சிந்தனைகள் வரலாம். உங்கள் உடமைகளை குறித்த பயம், நகை, பணம், பெறுமதியான பொருட்களை கள்வர்கள் கவர்ந்து சென்று விடுவார்கள் என்ற பயம், உங்கள் எதிரிகள் நிமித்தமான பயம் உங்களுக்கு ஆபத்து நேரிடும், என்னும் அச்சம் இது போன்ற அநேக காரியங்களை குறித்த பயம் உங்கள் சுக நித்திரைக்கு பங்கம் விளைவிக்கக் கூடும். அசுத்த ஆவியின் கிரியைகளினால் கெட்ட பயங்கர கனவுகள் உங்கள் தூக்கத்தை கெடுத்துக் கொண்டிருக்கலாம். நாளைய நாளைக் குறித்த விசுவாசத்தை இல்லாமல் ஆக்கும். கொடிய நோய்கள், நோய்களைக் குறித்த பயம் இவற்றால் உங்கள் நித்திரை தடைப்பட்டு உங்களுக்கு இரவு என்றாலே நிம்மதியான, ஆறுதலான, இன்பமான தூக்கம் இல்லையே என கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? கலங்காதிருங்கள்.

உங்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து விசுவாசம் கொள்ளுங்கள். நாள்தோறும் ஜெபியுங்கள். உங்களை அவரிடம் ஒப்படையுங்கள். அவருடைய விருப்பத்தை செயற்படுத்துங்கள். அவரை மாத்திரம் நேசியுங்கள். அவரை கிட்டிச் சேருங்கள் முழு இருதயத்துடன் அவரை நெருங்கி சேரும்போது ஒரு பயமும் எம்மை அணுகாது. உங்களை சுற்றியும், உங்கள் இல்லங்களை சுற்றியும் சொத்து உடமைகளை சுற்றியும் பாதுகாப்பு வேலி அமைத்து உங்களை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காத்துகொள்வார். உங்கள் உள்ளத்தின் பயத்தை நீக்கி இரட்சிப்பார். இன்பமான ஆறுதலையும் சமாதானத்யையும் சுகமான நித்திரையும் கட்டளையிடுவார். இன்றைய நாள் முதல் தேவ அன்பில் நிறைந்து அவருடைய சமுகத்தில் காத்திருந்து அவரை மிகவும் நெருங்கிச் சேர்ந்து கொள்ளுங்கள் உங்களுக்கோர் வெற்றியின் நாள்.



*என் அன்புத் தகப்பனே! இன்றும் தேவரீர் என்னோடு பேசினபடியால் ஸ்தோத்தரிக்கிறேன். நான் முழு உள்ளத்தோடு உங்களை விசுவாசிக்கிறேன். உங்களை கிட்டிச்சேருகிறேன். நீர் என்னை சுற்றிலும் என் இல்லத்தை சுற்றிலும் வேலி அமைத்து என் பயங்களையெல்லாம் நீக்கி காத்துகொள்ளுமாறு இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறேன். ~ஆமென்~*

---

*அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.*
*சங்கீதம் 91:4*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 05

வெள்ளி

## பரிசுத்தவான்களின் பாதங்கள் பரமபிதாவால் காக்கப்படும் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 39 - 40

**"அவர் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார்."** (நீதிமொழிகள் 2:8)

இந்தப் புதிய நாளின் உதயத்தில் காருண்யத்தின் தேவனின் புதிய கிருபையினால் நிறையப்பெற்று புது பெலனடைந்து ஜீவ மன்னா நாளாந்த தினசரியை வாசிக்க ஆயத்தப்படும் தேவப்பிள்ளைகளே! நீங்கள் அதிஷ்டசாலிகள். இலங்கை வாழ் இரண்டு கோடி மூன்று இலட்சம் ஜனங்கள் மத்தியில் தேவ வசனத்தில் ஆரம்பிக்கப்படத்தக்கதாக நல்ல நாளை பெற்ற நீங்கள் பாக்கியவான்கள். "ஜீவ மன்னா" நற்செய்திக்கூடாய் ஜீவனுள்ள வசனங்களை கற்றறிந்து ஆத்துமாவை பெலனடையச்செய்து வாழ்வில் ஜீவ ஒளியைக் காணச் செய்வது பிரதான ஆசிரியரான என்னுடைய வேலையில்லை. உங்களை அதிகமாக நேசிக்கும் உங்கள் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவே.

அன்பார்ந்தவர்களே! இன்றைய நாளில் உங்களுக்கு அளிக்கப்படும் பொருத்தனை அவர் உங்கள் பாதைகளை காத்துகொள்கிறார் என்பதாகும். வசனம் கூறுகிறது அவர் நியாயத்தின் நெறிகளை தற்காத்து தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார் என்றும் பரிசுத்த யோவானின் புத்தகத்தில் நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் என்றும் பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லையென்று கூறப்பட்டுள்ளது. இவ் வசனங்களை குறித்து பார்ப்போமேயானால் தேவன் எம்மை அழைத்தபடியினால் தெரிந்துகொண்டபடியினால் எம் பாதைகளை காத்து கொள்வதினால் அவருடைய பிள்ளைகளாக நாம் விளங்குகிறோம். கர்த்தர் தம்முடைய சுய விருப்பத்தின்படி எம்மை தெரிந்துகொண்டு இயேசு கிறிஸ்துவினால் மீட்டு எம்மை பரிசுத்தவான்களாய் மாற்றி நியாயத்தின் வழியில் எம்மை நடத்தி எம் பாதைகளை காப்பாற்றுகிறார். எம் நடைகளை காத்து வழிகளை செம்மை படுத்தி எமக்கு முன்பாய் கடந்து சென்று நியாயத்தின் நெறிகளில் நடக்கச் செய்கிறார்.

தேவப்பிள்ளைகளே கலங்காதீர்கள்! உங்களை தெரிந்துகொண்டவரும் அழைத்தவரும் உங்களை சிருஷ்டித்தவருமான தேவாதி தேவன். நீங்கள் செல்லவேண்டிய பாதைகளை காட்டி எப்படி கடந்து போவது என்பதை கற்றுகொடுத்து நன்மையான ஈவுகளைக் கொடுத்து சமாதானத்தின் ஆசீர்வாதத்தை பொழிந்து வாழ்க்கையில் சகல பொக்கிஷங்களையும் பெறச் செய்து உயர்த்தி கௌரவப்படுத்தி பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிறார். இதை விசுவாசித்து நடவுங்கள் தேவ சமூகம் உங்களுக்கு முன்பாய் கடந்து போகும். இன்றும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் நாளை பெற்றுக் கொள்ளுங்கள். ஆசீர்வாத நாள்.



எம் வழியான எம் நேசரே. என் பாதைகளைக் காப்பாற்றுகிறவரே! என் வழிகளை நியமித்தவரே. உங்களுடைய யோசனைகளும் திட்டங்களும் மிகவும் உயர்ந்தவைகள் என்பதை நான் அறிவேன். இன்றும் உங்கள் வழிகளில் என்னை நடத்துங்கள். என் வழியான இயேசுவின் நாமத்தினால். ~ஆமென்~

---

உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும். அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள். சங்கீதம் 37:18~19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 06

சனி

## தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே உன்னத ஆசீர்வாதங்களை பெறுவார்கள்!

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 01 - 02

**"கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களை திறந்தார். இதோ எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்."** (2 இராஜாக்கள் 6:17)

கர்த்தருடைய பெரிதான கிருபையால் சத்தியத்தை அறிந்து அவருடைய ஜனங்களாய் வேறுபிரிக்கப்பட்டவர்களும், இலங்கை வாழ் ஜனங்கள் மத்தியில் ஜீவனுள்ள தேவனை நமஸ்கரிக்கும் சர்வபராக்கிரம தேவனுடைய் தேவ பிள்ளைகளே! இன்றும் ஒரு நல்ல நாளை இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் பெற்று மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகிறேன். தேவனை குறித்து அறிந்தது அவரது ஜனங்களாய் பெரும் பாக்கியம் என நான் கூறுகிறேன். சிருஷ்டிகருக்கு முன்பாக மனிதர்களாகிய எமது வல்லமையோ, பராக்கிரமோ, சக்தியோ, அறிவோ எதுவும் பூச்சியமாகும். ஏனெனில் அவர் மாத்திரமே சர்வ பராக்கிரமுள்ளவர்.

இன்று நீங்கள் சந்திக்கும் எல்லா விதமான பிரச்சினைகள், போராட்டங்கள், கடன் நிந்தைகள் போன்ற எந்தக் காரியமானாலும் தேவன் மீது விசுவாசமாயிருங்கள். மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனத்திற்கான காரியங்கள் 2 இராஜாக்கள் 6:8 முதல் காணக்கூடியதாயிருக்கிறது. சீரியா தேசத்தின் இராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் செய்ய ஆயத்தமாகிய போது அதைக்குறித்து ஆலோசனை செய்த வேளையில் தேவ மனுஷனாகிய எலிசா அதை இஸ்ரவேல் இராஜாவுக்கு அறிவித்து அந்த இடத்திற்கு போகாதிருக்கும்படி எச்சரிப்பு செய்தான். இதைக் கேள்விபட்ட சீரிய ராஜா எலியா தீர்க்கதரிசியை பிடிக்கும்படி ஒரு இராணுவ சேனையை அனுப்பினான். அவர்கள் பட்டணத்தை முழுவதுமாக வளைத்துக்கொண்டதை எலிசாவின் வேலைக்காரன் கண்டு பயந்தான். அதைக் கண்ட எலிசா தீர்க்கதரிசி "பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றார். பிறகு தேவனை நோக்கி வேலைக்காரனுடைய கண்கள் திறக்கும்படி விண்ணப்பித்தபோது கர்த்தர் வேலைக்காரனுடைய கண்களை திறந்தார். 2 இராஜாக்கள் 6:17 இன்படி அவன் எலியாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளினாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை கண்டான்.

அன்பானவர்களே! எலியா தீர்க்கதரிசியைப்போல நீங்களும் விசுவாசிக்கிறவர்களாய் விசுவாசக் கண்கொண்டு காண்கிறவர்களாய் இருங்கள். எதற்கும் அஞ்சாமல் அவரை விசுவாசத்தோடு பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். எலியா என்னும் ஒரு மனுஷனுக்காக சீரிய தேசத்தின் இராணுவப்படையை பார்க்கிலும் வலிமை பொருந்திய வான சேனையை இறங்கச் செய்து எலியாவை காத்துக்கொண்டார். நீங்கள் எலியா தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் அவருக்கு அருமையானவர்கள். ஏனெனில் அவர் தீர்க்கதரிசி மாத்திரமே. நீங்கள் அவருடைய உரிமைக்குரிய பிள்ளைகள். கர்த்தரின் ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலம் புத்திர சுவிகாரத்தை பெற்றுக்கொண்ட பாக்கியவான்கள். இமைப்பொழுதும் உங்களைவிட்டு விலகாதப்படி உங்களோடிருக்கிறார். உங்களுக்காக யாவையும் செய்வார். இன்றும் விசுவாசத்தின் பெரும் நாளாக அமையட்டும்.



*என் நேசத்தகப்பனே! உங்கள் புத்திரசுவிகாரத்தை பெற்று கொடுத்தவரே நான் இப்பொழுது உங்கள் பிள்ளை. உங்கள் பிள்ளையாக என்னை தெரிந்துகொண்டவரே இயேசப்பா இன்றும் உங்கள் கிருபை என்னை நோக்கி கடந்து வருமாறு ஜெபிக்கிறேன். –ஆமென்–*

---

*இதோ, உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால்,*
*அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ,*
*அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள்.* ஏசாயா 54:15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 07

ஞாயிறு

## எம்மை மன்னித்து விடுவிக்கும் மீட்பர் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 03 - 04

**“அநேகந்தரம் அவர்களை விடுவித்தார்; அவர்களோ தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள்.”** (சங்கீதம் 106:43)

அன்பு தேவப்பிள்ளைகளே! அன்பர் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்று உங்களுக்கு நன்நாளாகட்டும் என வாழ்த்துகிறேன். இன்று அதிகாலை துதி ஸ்தோத்திரத்தோடே ஜெபித்து உங்கள் ஜெப நேரத்தை தேவனுக்கு ஒப்புவித்தீர்களா? உங்கள் ஞாயிறு ஓய்வு தினத்தை பரிசுத்தமாய் அனுசரித்தீர்களா? உங்கள் தசமபாகங்களை, காணிக்கைகளை சரியாக மனப்பூர்வமாக செலுத்தினீர்களா? தேவனுடைய இராஜ்யத்திற்குரியவைகளை கொடுத்தீர்களா? இவைகள் உங்களால் நிறைவேற்றப்பட்டிருந்தால் கலங்காதிருங்கள். ஏனெனில் கர்த்தருக்குள் உங்கள் உள்ளம் மகிழ்ந்திருக்க இவைகள் ஏற்றவையாகும்.

பிரியமானவர்களே! இறைவனுக்குரியவைகளை நீங்கள் சரியாக நிறைவேற்றினீர்களாயின் அவர் உங்கள் தேவைகள் யாவையும் சந்திப்பார். இச்செய்தியின் ஆரம்ப வசனம் சங்கீதம் 106:43 கூறுகிறது அநேகந்தரம் அவர்களை விடுவித்தார் என்பதாக. அவருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் கர்த்தருக்கு விரோதமாக எழும்பியபடியால் கர்த்தர் அவர்களை தண்டித்தார். அவர்கள் மிக வேதனைக்கும் துன்பத்திற்கும் ஆளாகி சிறுமைப்பட்டவர்களாய் நடாத்தப்பட்டபடியால் கர்த்தர் திரும்பவும் மனதுருகி அவர்களுடைய பாவங்களை மன்னித்து மறுபடியும் ஆசீர்வதித்தார். திரும்பவும் அவர்கள் எழும்பினார்கள். சிறிது நாட்கள் கடந்த பின்பு பழையவைகளை மறந்து பின்மாற்றத்திற்குள்ளாகி தேவனுக்கு விரோதமாய் நடக்க தொடங்கினார்கள். தேவ வசனத்தின்படி தேவன் அவர்களை அநேகந்தரம் விடுவித்தார். பிள்ளைகளே! நீங்களும் இதுபோல் ஆத்துமீக ஜீவியத்தில் பின்மாற்றமடையும் போது ஆத்துமீக வைராக்கியம் குறைவுபடும் போதும் உங்கள் ஆத்துமீக வாழ்வின் முன்னேற்றம் தடைப்பட்டதா? உங்கள் பெலவீனம் அறியாமையினால் வேதனைகளில் அகப்பட்டு தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தீர்களா? இப்பிழையினால் உங்களுக்கு தேவ சமூகத்திற்கு முன்பாக நிற்க முடியவில்லையா? என்னவாயினும் நீங்கள் கலங்காதிருங்கள். தேவன் எம்மை அநேகந்தரம் விடுவித்து, மன்னித்து, ஏற்றுக்கொள்கிற அன்புத் தகப்பனாக இருக்கிறார்.

இன்றும் எல்லாத் துன்பங்கள் பிரச்சினைகள் சவால்கள் சோதனைகள் யாவற்றிலுமிருந்து எம்மை விடுவித்து காத்திடுவார். நீங்கள் விழுந்து போகாமல் மனஸ்தாபப்பட்டு மனங்கசந்து அழுது தேவனை நோக்கி திரும்பி வரும் வரை உங்களை பார்த்துக்கொண்டேயிருப்பார். அவர் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பு அளவுகளை கடந்தது. ஆகையால் பின்மாற்றமடைந்து தேவ சமூகத்தில் நிற்க தயங்கும் தேவப்பிள்ளைகளே! இன்று மனங்கசந்து அழுது ஜெபித்து மன்னிப்பை பெற்றுகொள்ளுங்கள். உங்களை விடுவித்து ஆசீர்வதித்து மறுபடியும் அவரின் அன்பில் மகிழ்ந்திருக்கச் செய்ய உங்களருகில் இருக்கிறார். இன்றும் ஒரு வெற்றியின் நாள்.



என் மீட்பரும், இரட்சகருமானவரே, எம்மை நேசிக்கிறவரே உங்கள் அன்பின் பெருக்கத்தால் எம்மை மன்னித்து விடுவிக்கிறபடியால் உங்களை ஸ்தோத்தரிக்கிறேன். இன்றும் உங்கள் சமூகத்தில் என்னை தாழ்த்தி ஒப்புக் கொடுக்கிறேன். எல்லா துன்பத்துக்கும் விலக்கி என்னை காத்துகொள்ளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்;
ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி,
நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 2 பேதுரு 3:9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜுலை 08
திங்கள்

## சிந்தனைக்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க செயல்களை செய்பவர் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் 05 - 06

**“அப்பொழுது ராஜாவுக்குக் கைலாகு கொடுக்கிற பிரதானி ஒருவன் தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா என்றான். அதற்கு அவன்: உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான்.”**
(2 இராஜாக்கள் 7:2)

ஆச்சரியமானவைகளையும், அதிசயமானவைகளையும் காணச் செய்யும் பரிசுத்தருடைய இயேசு என்னும் நாமத்தினால் உங்களுக்கு இன்று ஒரு சுப நாளாகட்டும் என வாழ்த்துகிறேன். உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாத பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையிலே நிகழப்பண்ணி உங்களை ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவர் என்பதை அறியத்தக்கதாக இருப்பது, தேவனுடைய பிள்ளையாக மாறும் படியான அதிஷ்டத்தை பெற்றுகொண்டதேயாகும்.

தேவ பிள்ளைகளே! “கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும்” என்று வேத வசனம் வெளிப்படுத்துகிறது ஆகையால் இன்றைய தினத்திலும் அவருடைய செயல்களுக்கூடாக ஐசுவரியவானாக மாற்ற பெருகச்செய்ய எம் கர்த்தரால் கூடும். பிள்ளைகளே! சமாரியாவிலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. இது சீரிய ராஜாவான பெனாதாத் சமாரியாவிலே முற்றிகை போட்டான். அதனாலேயே பஞ்சம் உண்டானது. அப்பொழுது எலிசாவிற்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி “கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள் நாளை தினம் இந்நேரத்திலே சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை ஒரு சேக்கலுக்கும் இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேககலுக்கும் விற்கப்படும் என்றான்” இது 2 இராஜாக்கள் 7:1 காணப்படுகிறது, அதைக் கேட்ட ராஜாவின் பிரதானி “இதோ கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமோ என்று கேட்டான். அதற்கு பதிலாக எலிசா தீர்க்கதரிசி “நீ உன் கண்களினாலே அதனைக் காண்பாய் ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான்”. தனது பிள்ளையை வெட்டி சமைத்து சாப்பிடும் அளவிற்கு சமாரியாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது என வேதாகமம் வெளிப்படுத்துகிறது. ஆகையால் தான் ராஜாவின் பிரதானி எலிசாவின் வார்த்தைகளை நினைத்துப்பார்க்க முடியாத காரியமாக எண்ணியே அப்படி கூறினான். ஆனால் எலியாவின் வார்த்தைகள் அவ்வண்ணமாகவே நிறைவேறியது என்பதை 2 இராஜாக்கள் 7 ம் அதிகாரத்தை தொடர்ந்து வாசித்து அறிந்துகொள்ள முடியும்.

தேவபிள்ளைகளே! நீங்களும் உங்கள் ஜீவியத்தில் சந்திக்கும் சகலவிதமான பாரதூரமான பிரச்சினைகள், வழக்குகள், காணி சொத்து, தொழில் இவைகளில் காணப்படும் முற்றுப்பெறா பிரச்சினைகள் குடும்பபோராட்டங்கள் நோய்கள், சந்தேகங்கள், வாலிபர்களுடைய பழக்க வழக்கங்களில் காணப்படும் பாவக் காரியங்கள், இப்படிப்பட்டவைகளோ இதற்கு மேற்பட்ட எப்படியான பிரச்சினையாக இருப்பினும் என்ன கடினமான காரியமாயினும் உங்கள் தேவனுக்கு முன்பாக அவைகள் பெரிய கடினமான காரியமல்ல என்பதை அறிந்துக் கொள்ளுங்கள் சகல வல்லமையும் பொருந்திய கர்த்தரை விசுவாசத்துடன் நோக்குங்கள் மனிதனால் நினைத்துப் பார்க்க முடியாத காரியங்கள் இப்படியும் நடக்குமா என வியக்கத் தக்க சம்பவங்கள் உங்கள் வாழ்வில் இடம் பெறலாம். உங்கள் கரம் பிடித்து நடத்தும் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள் மகா வரட்சியான காலத்திலும் உங்களை அருமையாய் நடத்துவார்.



அதிசயமாய் எம்மை நடத்தும் அன்பு தெய்வமே. இஸ்ரவேலரின் தேவனே மனிதர்களால் எண்ணிப்பார்க்க முடியாத காரியங்களை செய்கிறவரே இன்றும் எம் வாழ்வில் புதிய பெரிய காரியங்களை காணச்செய்யும் நித்தமும் என்னை நடத்தும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

---

இதுவும் சேனைகளின் கர்த்தரால் உண்டாகிறது;
அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர். ஏசாயா 28:29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 09

செவ்வாய்

## இன்று எமக்கு மகிழ்ச்சியைத்தரும் நாள் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 07 - 08

**"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்."**
(சங்கீதம் 118:24)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே! கர்த்தரின் கிருபையினால் நிறைந்த இந்த மகிழ்ச்சிகரமான காலைப் பொழுதினிலே இயேசு கிறிஸ்துவின் மதுர நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கின்றேன். இன்றைய தினம் மகிழ்ச்சியின் தினமாக இருக்குமாறு பிராத்திக்கின்றேன். பரிசுத்த வேதாகமத்தின் சகல வார்த்தைகளும் உண்மையுள்ளதும் உயிருள்ளவை என்பதை அறிந்து, உணர்ந்து ஆசையோடும், ஆர்வத்தோடும் படிக்கவும், தியானிக்கவும் பிரியமுள்ளவர்களே! நீங்கள் உண்மையாகவே மகா அதிஷ்டசாலிகள். ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில், "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." என வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

தேவப்பிள்ளைகளே! இன்றைய நாளின் தேவ வசனம் உங்களுக்கு அறிவிப்பது கர்த்தர் உண்டு பண்ணின நாள். இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். என்பதே இன்றைய தினம் இந்த ஜீவ மன்னா தின தியானங்களின் செய்தியை வாசிக்கும் நீங்கள் காலையில் துயில் நீங்கி எழுந்ததே அநேக கவலைகள் பிரச்சினைகளை மனதில் சுமந்தபடியாய் இருக்கக்கூடும். இந்த வசனத்தின் படி இந்த நாளில் நான் எங்கே மகிழ்ச்சியாய் இருப்பது, என் உள்ளத்தில் கவலை நிறைந்திருக்கின்றது. நான் எப்படி சந்தோஷப்படுவேன் என்று கலங்குகின்றீர்களா? ஆனால், வேத வசனம் கூறுகிறது கவலைப்பட வேண்டாம் என்று. எமது பிரச்சினை கவலை, நோய் போன்ற எம் வாழ்வின் எல்லாவிதமான சங்கடங்களையும் நினைத்து நினைத்து கவலைப்படுவதன் மூலம் அதிலிருந்து விடுபட முடியாது என்பதையும் வேத வசனங்களுக்கூடாய் அறியலாம். எமது சரீரத்தின் மிகச்சிறிய அதுவும் உதிர்ந்து போகும். தலை மயிரைக் கூட எம்மால் கறுப்பாக மாற்றவோ, வெள்ளையாக மாற்றக் கூடாது எமக்கு வரும் இன்னல்களில் வேதனை, நோய்களிலிருந்து நாமாகவே வெளியே வர விடுதலையடைய முடியாது. கவலைப்பட்டு, கலங்கி, புலம்புவதன் மூலம் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. யாவற்றையும் நன்மைக் கேதுவாக மாற்றவல்ல இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் தஞ்சமடைந்து அவரையே நம்பி விசுவசித்து, ஜெபித்து இவைகளைத் தைரியமாக சந்தித்து கடக்கும் போது அவர் ஒவ்வொறு சிக்கல்களையும் நீக்கி விடுவித்துக் காப்பார்.

அன்பான தேவ பிள்ளைகளே! எங்கள் அன்புத் தகப்பன் எங்களை அளவில்லாமல் நேசிக்கிறார். சர்வ வல்லமை பொருந்தியவர். சங் 55:23 வசனம் கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார் என்று கூறுகிறது. ஆகையால் கலங்காதிருங்கள். தேவனிடமிருந்து உங்கள் ஜெபங்களுக்கு பதில் வரத்தாமதமானாலும், சரியான பதில் உங்களை நோக்கி கடந்து வந்துகொண்டிருக்கிறது என உறுதியாய் விசுவாசியுங்கள். சகலவற்றையும் தேவ பாதத்தில் கையளித்து ஜெபித்து உள்ளத்தில் ஆறுதலைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் மகிழ்ந்து களிகூறும் நாள்.



எங்கள் இரட்சிப்பின் கன்மலையானவரே என் அன்பின் தகப்பனே இன்றைய நாளை படைத்தவரே. இன்றும் உங்கள் சித்தம் என்னில் செயல்படுவதாக. உங்களுக்குள் மகிழ்ந்திருக்க எனக்கு உங்கள் கிருபையைத் தாருங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

---

அவைகளைத் தூற்றுவாய், அப்பொழுது காற்று அவைகளைக் கொண்டுபோய், சுழல்காற்று அவைகளைப் பறக்கடிக்கும்; நீயோ கர்த்தருக்குள்ளே களிகூர்ந்து, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே மேன்மைபாராட்டிக் கொண்டிருப்பாய். ஏசாயா 41:16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 10

புதன்

## கர்த்தர் எல்லாத்தீங்கையும் விலக்கிக்காப்பார் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 09 - 10

**"கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்."** (சங்கீதம் 121:7)

பாசம் நிறைந்த பிள்ளைகளே! தேவனுடைய அனுகிரகத்தால் நாம் பெற்றுக்கொண்ட இந்த நாளிலே ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் வாழ்த்துகிறேன். தீமைகள் அணுகாத நல்ல நாளை பெற்று மகிழ்ந்திருங்கள், இன்றைய நாளின் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேத வசனத்தின்படி எல்லாத் தீங்கிற்கும் விலக்கி காக்கவல்ல தேவாதி தேவனை அறிந்து அவருடைய அநாதி தீர்மானத்தின்படி அவருடைய சந்ததிகளாய் மாறி விசேஷித்த கிருபைக்கு உரிமையுள்ளவர்களாய் இலங்கை வாழ் மக்கள் மத்தியில் அவருடைய சாட்சிகளாய் இருப்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய காரியம்.

தேவ பிள்ளைகளே! இப்புவியில் வாழும் நாங்கள் எவ்வளவு அவதானமாக ஜீவனம் நடத்தினாலும் அநேக முயற்சிகள் மேற்கொண்டு நல்லவற்றையே நாடினாலும் நாமறியாதபடி தீங்கான காரியங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும். ஏன் எப்படி என்று தேடிப்பார்த்தாலும், இதைக்குறித்து அறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக ஒரு மனிதருடைய சரீரத்தில் ஏற்பட்ட ஒரு சிறு வேதனையை வைத்தியரிடம் காட்டி சிகிச்சை மேற்கொள்ளும்படி மருத்துவரிடம் சென்றால் அவர் பரீட்சித்துப்பார்த்து விட்டு இது புற்றுநோய் என கூறினால் அம் மனிதன் கதிகலங்கி போய் விடுவான். மானசீகமாகவும், சரீரத்திலும் விழுந்து போவான் சோகம் என்ற இருள் அவனைச் சூழ்ந்துக்கொள்ளும் அவன் அறியாதபடியே இந்த நோய் அவனைப் பிடித்தது. இப்படியாக மரணத்தை கொண்டு வரும் இந்நோய் மனிதர்களுக்கு பெரும் பீதியை உண்டு பண்ணும். மனித உயிர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. ஆனால், எமது மீட்பர் இயேசு கிறிஸ்து எங்களுக்காக தனது சரீரத்தில் பட்ட முப்பத்தொன்பது கசையடிகள் அவருடைய உடலில் ஏற்படுத்திய காயங்களால் தம்மை விசுவசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்கு தெய்வீக சுகத்தைக் கொடுக்கிறார் என்பதில் ஐயமில்லை. நோய்கள் மாத்திரமல்ல எல்லாவிதமான பிரச்சினைகள், துன்பங்கள், கவலைகள், கண்ணீர், வேதனை, சவால்கள் எல்லாவிதமான தீங்கான காரியங்களில் உங்களைக் காத்திடுவார். உங்கள் உள்ளத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். தைரியமாக தேவனை பற்றிய விசுவாசத்தோடு உறுதியாக முகங்கொடுங்கள்.

அன்பானவர்களே! தேவனை ஏற்றுக்கொண்ட நாள் முதலாய் எனது இருபத்தொன்பது வருட ஆன்மீக வாழ்வில் ஒரு நோயுமின்றி சுகத்துடன் இருப்பது சாத்தான் கொண்டு வரும் எல்லா வித தீங்குகளுக்கும், சோதனைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் சவால்கள் போன்ற எல்லா இக்கட்டுகளிலிருந்து வெற்றி பெற்று முன்னோக்கிச் செல்வது என் கர்த்தர் என்னோடு இருப்பதாலே. என்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கி காத்த இறைவன் உங்களையும் காப்பார். அவரை விசுவசித்து உங்கள் வாழ்வை அவர் வசம் ஒப்படையுங்கள். நீங்கள் ஒருபோதும் வெட்கப்படாதபடி பார்த்துக்கொள்வார். உங்களை நேசிக்கும் அவர் தன் கண்மணிபோல் உங்ளைக் காப்பார். உங்களுக்கு மகிழ்ச்சிகரமான விடுதலையின் நாள்.



என் அன்புத்தகப்பனே! எல்லா தீங்கிற்கும் விலக்கிக் காப்பவரே, ஆகையால் நான் அகால மரணம், நோய், துன்பங்களைக்கண்டு அஞ்சமாட்டேன். ஏனெனில், நீங்கள் என் தேவனாயிருக்கிறீர்கள். நான் உம்முடைய பிள்ளை. இன்றும் என்னைக் காத்தருளுங்கள். என்னைப் பெலப்படுத்தி காத்தருளும். ~ஆமென்~

---

*கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.*
*சங்கீதம் 145:20*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை **11**
வியாழன்

## கனப்பொழுதில் விடுவிக்க வல்ல இயேசுக்கிறிஸ்துவின் கிருபையின் கரங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம்
11 - 12

**"உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்."** (மாற்கு 5:29)

என் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இன்று ஜெயங்கொண்ட சுப நாளாகட்டும் என்று பிராத்திக்கின்றேன். ஜீவனுள்ள சர்வல்லமையுள்ள தேவபிதாவை குறித்து அறிந்து கொண்டவர்கள் அதிஷ்டசாலிகள். ஏனெனில்,அவர் உருவாக்கியவர் மாத்திரமல்ல எமக்கு சகாயம் புரிபவராகவும், துணை நிற்கிறவராகவும் இருக்கிறார். அனேக காரியங்களில் மனிதர்கள் மத்தியல் ஒருவருக்கொருவர் உதவிகள் ஒத்தாசைகள் பெற்றுக்கொள்வது அவசியம். சிலவேளைகளில் ஒருவராலும் உதவி செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். மனிதர்களின் உதவிகள் ஒத்தாசைகள் ஒரு வரையறையோடு நின்று விடும். அதற்குமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது போய்விடும். ஆனால், தெய்வத்தால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனுடைய வல்லமை கட்டுபாடுகள் அற்றது யாவற்றையும் செய்யவல்ல ஜீவனுள்ளவர் அவரே. அவரை அறிந்தவர்கள் பேறுபெற்றோர்.

எமது பிரதான வசனம் மாற்கு 5:29 சொல்கிறது. பன்னிரண்டு வருடங்களாய் பெரும்பாடுள்ள ஸ்திரி அவளுடைய தீராத வியாதிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொண்டாள் என்றும், அவள் சுகத்தைப் பெற்றுக்கொண்ட காரணமே அவளுடைய விசுவாசமே. அந்த ஸ்திரி பன்னிரண்டு வருடங்களாய் பெரும்பாடுள்ளவளாய் அநேக வையத்தியர்களை நாடிச்சென்று அவளுக்கு உண்டானவகளையெல்லாம் செலவழித்து பரிகாரம் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. மிக வேதனையோடு வந்தவள் வழியில் கடந்து போய் கொண்டிருக்கும் இயேசுவாமியை அணுகிப் பெருந்திரளான சனங்களுக்கு மத்தியில் பின்னாக வேகமாக நடந்துபோய், அவருடைய வஸ்திரத்தை தொட்டாள். அவருடைய சரீரத்தின் மேல் இருந்த சால்வையை தொட்டார். சுகம் பெற்றாள். அந்த சுகம் அவளது விசுவாசத்தால் கிடைத்தது. நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று நாவில் அறிக்கை பண்ணி முழு உள்ளத்தோடு விசுவசித்து அவரைப் பின்தொடந்து ஜனக்கூட்டத்தில் அவருக்கு பின்னாக வந்து தொட்டு சுகமானாள், தீராத நோயினால் உடனடியாக சம்பூர்ண விடுதலை தெய்வீக சுகத்தை பெற்றுக்கொண்டாள்.

ஆம், அன்பான தேவபிள்ளைகளே! நோய்கள், துன்பங்கள் போன்ற அநேக காரியங்கள் நிமித்தமாய் கலங்கித் தவிக்கும் சகலருக்கும் விடுதலைப்பெற்றுத்தர உங்கள் தேவன் வல்லவராய் இருக்கிறார் உலகத்தவரால் உலக சட்டத்திட்டங்கள், நீதிமார்க்கங்கள் எதுவானாலும் விடுவிக்க முடியாதவைகள் எம் தேவனால் கூடும். இரட்சகர் இயேசு எமக்காய் விண்ணப்பம் செய்யும்படி எங்கள் மத்தியில் ஜீவனுடன் இறங்கி வருகிறார். பரலோகத்திலிருந்து இறங்கிவரும் இறைவன் மீட்க, விடுவிக்க உங்களுக்கு சமீபமாக வருகிறார். நீங்கள் விசுவாசத்தோடும், முழு உள்ளத்தோடும் கேட்கவேண்டும். பல ஆண்டுகளாக நீங்காத பிரச்சினைகளையும் நீங்கி விடுவிக்க கிரியை செய்ய வல்லவர் உங்களோடிருக்கிறார். இன்றும் ஜெயம் தரும் நன்நாள்.



இயேசு என்னும் திருநாமத்தை உயர்த்தி அவரை எமக்கு தந்தருளின தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். அவரின் குரலுக்கு செவிக்கொடுப்பவரே. என் முழு உள்ளத்தோடும் விசுவாசத்தோடும் இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் விண்ணப்பிக்கின்றேன். ஜெபங்களைக்கேட்டு பதில் தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி,
உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்;
கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். ஏசாயா 58:8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 12

வெள்ளி

## ஆறுதல் அளிக்கும் தெய்வம் இயேசு !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 13 - 14

**"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்;"** (ஏசாயா 40:1)

எமது இரட்சகரும் நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இன்று என் அன்புத் தேவபிள்ளைகளாகிய நீங்கள் யாவரும் மகிழ்ச்சியும், ஆசீர்வாதமும் பெற்று வெற்றியோடு முன்செல்லும்படி வாழ்த்துகிறேன். இச்செய்தியை எழுதும் இன்றல்ல, நேற்றைய தினம் காலை வேளை தொடக்கம் மாலைவரை அநேக நற்செய்திகள் என் செவிகளில் கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் என் தேவனை நோக்கி ஆண்டவரே, இன்று இவ்வளவாய் நல்ல சுக செய்திகளை கேட்கச் செய்தீர்களே, அதற்காய் நன்றி சொல்லி துதிக்கிறேன் என ஜெபித்தும் கொண்டேன்.

தேவ பிள்ளைகளே! நேற்று மிக சந்தோஷமாகவும் உள்ளத்தில் ஆறுதலுடனும் இருந்தேன். இப்படி என் இதயம் சந்தோஷம், ஆறுதலினாலும் நிறைந்திருந்தபடியால் அன்றாட என் வேலையாவையும் மிக ஆர்வத்துடனும் உற்சாகத்துடன் பிழைகளின்றி ஒழுங்குடன், அமைதியாக செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது. எம் உள்ளத்திற்கு சந்தோஷத்தை கொடுக்க எம் கர்த்தரால் மாத்திரமே கூடும். அவரது ஜனங்களை அவர் ஆற்றி தேற்றி, நல்ல செய்திகள், நன்மையான காரியங்களால் வழிநடத்துகிறார். பரலோக தகப்பனுடைய பிள்ளைகளே, எங்களைத் தெரிந்துக் கொண்ட அவரைக் குறித்து அறிந்து அவரால் நாம் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படியான பாக்கியத்தைப் பெற்ற நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. ஏசாயா 40:1 இன்படி எங்கள் கர்த்தராகிய இயேசு சுவாமி எம்மை, அவருடைய ஜனத்தை ஆற்றித் தோற்றி வழிநடத்துகிறார் என்றும் ஏசாயா 40:2 அவருடைய கிருபையின் வார்த்தைகளை வெளிப்படுத்துகிறது. அவரின் வார்த்தை எம் உள்ளத்திற்கு சந்தோஷத்தையும், சமாதானத்தை, நம்பிக்கையையும் எற்படுத்துகிறது.

தேவ பிள்ளைகள் சகல மனிதரும் தேடுவது விரும்புவது சமாதானத்தையும் சந்தோஷத்தையுமே.அவருடைய வார்த்தை கூறுகிறது, தமது ஜனங்களை ஆறுதல்படுத்துவதாக.ஆகவே நொந்துபோன உள்ளங்களை ஆற்றி தேற்றும்படியாய் அவர் எங்களோடிருக்கிறார் என விசுவாசியுங்கள். அவர் எமக்கு உதவி செய்து எம் இதயத்தின் வேதனைகளை அகற்றி போடுவார். உங்கள் இதயம் கலங்காதிருப்பதாக. மனிதனாகிய நாங்கள் வாழ்க்கை பாதையில் முன்னே செல்ல உள்ளத்தில் சமாதானமும் சரீர சக்தியும் அவசியம் என்பதை அறிவோம்.ஏசாயா 40:2 வசனத்தில் நாம் பார்க்கிறோம் எமது பிழைகளுக்கும், பாவங்களுக்கும் உரிய தண்டனை இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என எழுதப்பட்டுள்ளது. உங்கள் தண்டனைக்குரிய வேதனைக் காலங்கள் நீங்கிற்று.நீங்கள் ஆறுதலை பெற்றுக் கொள்ளும் காலங்கள் ஆரம்பமாகிவிட்டது.அவருடைய வார்த்தைகளின்படி நீங்கள் அநேக ஆசீர்வாதங்களைப் பெறப்போகிறீர்கள் என விசுவாசித்து நடவுங்கள். விசுவாசித்து நடக்க பழகிக் கொள்ளுங்கள். உங்கள் எதிர்காலத்தின் சகல காரியங்களையும் அவர் தாமே சரியாக நடத்தி வெற்றியின் பாதையில் கொண்டு செல்வார். இந்நாள் வெற்றியின் நாள்.



என் அன்புத் தந்தையே! உங்கள் ஜனங்களை ஆற்றித் தேற்றிபவரே, நீங்கள் என்னையும் உங்கள் ஜனங்களோடு சேர்த்துக் கொண்டபடியால் நன்றி. என் வாழ்வின் துயரங்கள் யாவையும் அகற்றி இன்றைய நாள்முதல் என்னை ஆறுதல்படுத்தி வழிநடத்தும்படியாய் இயேசுவின் நாமத்தில் செபிக்கிறேன். -ஆமென்-

---

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ,
நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன். எசேக்கியேல் 34:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 13

சனி

**உங்கள் கட்டுகளை அவிழ்த்து விடுவிக்கும் இரட்சிப்பின் கன்மலை !**

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 15 - 16

**"கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்."**
(சங்கீதம் 116:16)

என் அருமையான தேவப்பிள்ளைகளே! எம் இரட்சிப்பின் கன்மலையாக ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் இக் காலைப்பொழுதில் மகிழ்ச்சியுடன் கூடிய இனிய நாளை பெற்றுக்கொள்ளுமாறு வாழ்த்துகிறேன். வரவேற்கின்றேன். எம் பரலோகப் பிதாவின் யோசனைகளும் எமக்கு கற்றுத் தரும் பாடங்களும் மனிதர்களாகிய எமது புத்தியினாலோ இயற்கை நியதிக்கூடாகவோ அறிந்துக் கொள்ள முடியாது. அவைகள் அற்புதமானவை. சிந்தனைக்கூடாக நோக்கிப் பார்க்கும்போது மனிதனை கயிரைக்கொண்டு இறுகக் கட்டுவதைக் கட்டு என சொல்வதாகும். ஆனால் தேவ வசனத்தின் தேவன் உரைக்கும் கட்டுகள் எனப்படுவது மனிதர்கள் சந்திக்கும் துக்கங்கள், வேதனைகள், நோய்கள், போராட்டங்கள், சாத்தானின் கிரியைகள் இவை போன்ற மனிதனை தளர்ந்து போக செய்யும் காரியங்களாக எம்மை இறுக்கி வைத்திருக்கும் வேதனைக்குரியவைகளையே கட்டு என்பதாகும். மனிதன் அறிவது உலகப்பிரகாரமான கட்டே. ஆனால் தேவன் மாத்திரமே ஆத்துமீக கட்டுக்களைக் குறித்து அறிந்துள்ளார்.

தேவப் பிள்ளைகளே! தேவனுடைய பிள்ளைகளாக அவரைக் குறித்து அறிந்து அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து நடக்கும் உங்களுக்கும் கட்டுக்களைக் குறித்து சில காரியங்களை பேசப்போகிறார். மனிதர்கள் எந்நேரமும் முயற்சிப்பது வாழ்வில் சுதந்திரமாக ஜீவிக்கவே. எந்த விதமான சங்கடங்களுமின்றி நிம்மதியாக வாழவே விரும்புகிறார்கள். ஆனால் அப்படி சந்தோஷமாக ஜீவிப்பது மிகச் சிலரே. ஆவிக்குரியவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் சாத்தான் உங்களை சோதிக்கும்படியாய் சில கட்டுக்களை போட்டிருக்கக் கூடும். நீங்கள் சந்திக்கும் நோய்கள், தோல்விகள், துக்கங்கள், போராட்டங்கள் குறித்து விசுவாசத்தில் தளர்ந்து உலக ஜனங்களைப் போல் உலகப் பிரகாரமாக காரியங்களை செய்யாதிருங்கள்.நீங்கள் தேவனுடையவர்களாய் இருப்பதால் எல்லா விதமான கட்டுகளை அவிழ்த்து உங்களை விடுவிப்பார் என சங்கீதம் 91:14 இல் தேவனால் கூறப்பட்டிருக்கிறது. தேவனை அறியாத ஜனங்கள் இந்தக் கட்டுக்களை அவிழ்க்கக் கூடிய சத்தியத்தை உணராதபடி அவர்கள் அந்த கட்டுகளோடேயே ஜீவித்து வேதனைகளையும் பிரச்சனைகளையும் சுமந்து வாழ்கிறார்கள்.

அன்பார்ந்தவர்களே! இன்றும் உங்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் இருக்கும் கட்டுகளையும் உங்களுக்கு வெளிப்படுத்தி விடுவித்து தருமாறு தேவனை நோக்கி ஜெபியுங்கள். நீங்கள் ஆத்துமீக பிள்ளைகளாயினும் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்றும் பரிசுத்தவான்களுக்கு பாடுகள் அநேகம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் இருதயம் கலங்காதிருங்கள். ஏனெனில் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று இயேசு சுவாமி கூறியுள்ளார். அவர் உங்களோடிருக்கிறார்.எல்லாவற்றிலும் உங்களுக்கு விடுதலை அளிப்பார். வெற்றியின் நாள்.


என் அன்புத் தகப்பனே, நீங்கள் கட்டுகளை அவிழ்க்கிற தேவன். நான் அதிக பிரச்சனைகளுக்கு மத்தியில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். என் இயேசப்பா, என் வாழ்வை உங்கள் கரத்தில் ஒப்படைக்கிறேன். என் வாழ்வில் சகல கட்டுகளையும் முறித்துப் போட்டு என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை; உன் சந்திரன் மறைவதுமில்லை;
கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்.
ஏசாயா 60:20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 14

ஞாயிறு

## உங்கள் பலவீனத்தில் பெலனளித்து புது வழிகளில் நடத்துபவர் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 17 - 18

**"தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்."** (ஏசாயா 35:3,4)

அன்பான என் தேவ ஜனங்களே! இயேசு என்னும் இன்பமான நாமத்தைச் சொல்லி உங்களை வாழ்த்துகிறேன். இன்றைய நாள் உங்களுக்கு ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டு வரட்டும். இந்த உதயத்தில் பரலோக தந்தையின் ஜீவனுள்ள கிரியை செய்கிற வார்த்தைகளுக்கூடாய் உங்களுடன் பேச தேவன் கொடுத்த இந்த மன்னா நாளிதழுக்காய் நன்றி கூறுகிறேன். ஒவ்வொரு நாளும் தேவனின் வார்த்தைகள் மூலம் தேவசெய்தியை உங்கள் முன்கொண்டு வரும்படி தேவ அநுக்கிரகம் பரத்திலிருந்து கடந்து வருகிறது தேவ கிருபையே. உங்கள் ஆத்துமீக ஜீவியத்தின் சோர்வுகள் நீங்கி உயிரடையும்படி எழும்புதலை காணும்படி குறைகள் நீங்கி தேவனை அறியும் அறிவில் வளரத் தக்கதாய் பின் மாற்றங்கள் விலகவும், ஆத்துமா அனல் மூட்டப்படும் படியாய் ஜீவ மன்னா மாத வெளியீடுகளை வெளியிட கர்த்தருடைய தயவு கிடைத்தபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

தேவ பிள்ளைகளே, இன்றைய செய்தியின் ஆரம்ப வசனம் ஏசாயா 35:3-4, உங்களுக்கு சொல்லும் செய்தி தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதருகிறவர்களைப் பார்த்து பயப்படாதிருங்கள், திடன் கொள்ளுங்கள் என்பதாகும். கைகள் பெலனற்று போவது, முழங்கால் தள்ளாடுவது, சரீரத்தில் பெலவீனம் ஏற்படுவதால், அல்லது எமக்கு பயமான எந்தவொரு காரியமாவது ஏற்பட்டால் அல்லது எதிரிகள் எம்மை தாக்க வரும்போது ஏற்படும் பயத்தினாலாக இருக்கலாம். மிகப் பய உணர்வு ஏற்படும்போது கைகள், கால்கள் நடுங்கும். உங்கள் வாழ்வில் பயங்கரமான காரியம், சவால்கள், அதிக கோபம் இதனால் இந்த நடுக்கம் ஏற்படலாம். இப்படி எந்த விதமான விடயங்களினால் என்ன நடந்தாலும் கலங்காதபடி உங்கள் தேவன் உங்களோடிருக்கிறார் என விசுவாசியுங்கள். உங்கள் சிருஷ்டிகர் உங்களை தெரிந்துக்கொண்ட நாள்முதல் உங்களோடிருந்து உங்களை பலப்படுத்துகிறார். உங்களை தைரியமடையச் செய்கிறார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவன் ஆறுதலின் தேவனாக இருக்கிறபடியால் எந்த வகையான விசாலமான பிரச்சினையாக இருந்தாலும் சவாலாகவோ, பயமுறுத்தலாகவோ இருந்தாலும் உங்களை கைவிடாதவராக உங்களோடிருந்து உங்களை மீட்டருளுவார். வார்த்தைகளால் தேற்றி அவருடைய விஷேசித்த கவனத்தை உங்கள் மீது வைத்திருக்கிறார் இன்றும் கிருபையின் நாள்.



என் நேசத் தகப்பனே, நீங்கள் எம்மைப் பெலப்படுத்துகிற தேவன் பெலவீனனான என்னை உங்கள் வார்த்தைகளால் பெலப்படுத்துங்கள். இயேசப்பா, நீங்கள் எப்போதும் என்னோடிருங்கள். உங்கள் வல்லமையின் கரங்கள் என்னை அணைத்துக் கொள்வதாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.~ஆமென்~

---

உம்மிலே பெலன்கொள்ளுகிறமனுஷனும்,
தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.
சங்கீதம் 84:5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை **15**

திங்கள்

**வறண்ட நிலமான வாழ்வில் வற்றாத நீரூற்றுகளையும் நீர்த்தடாகங்களையும் உருவாக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 19 - 20

**"வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்."** (ஏசாயா 35:7)

இயேசு கிறிஸ்து என்னும் மகிமைக்கு பாத்திரமான நாமத்தை சொல்லி இப்புலரும் உதயத்தில் அரும்புகளும் மலர்களும் இளந்தளிர்களுமான புதுப்பொழிவுடன் விளங்கும் இந்த வேளையில் ஜீவ மன்னா வாசகர்களாகிய தேவனுடையவர்களே! உங்களை வாழ்த்தி, ஆசீர்வதிக்கிறேன். "ஜீவ மன்னா" நாளாந்த ஏட்டின் தேவ வார்த்தைகளை வாசித்து ஆத்துமீக லௌகீக ஆசீர்வாதங்கள், அறிவுரைகள், ஆவியானவருடைய உணர்த்துதல்கள் போன்ற அநேக நன்மைகளை பெற்றுகொண்டவர்கள் எமக்கு எழுதும் விமர்சன கடிதங்களுக்காய் நன்றி கூறுகிறேன். தினந்தோறும் தாங்கள் வாழ்வுக்கு தேவையான வழிநடத்தல், ஆறுதல் ஆத்மீக வளர்ச்சியை இதன் மூலம் பெற்று வருவதாக கடிதங்கள் தெரிவிப்பதால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அதன் மூலமாய் தேவன் உங்களை எவ்வளவு அதிகமாய் நேசிக்கிறார் என்பதை அறிந்துக்கொள்ளக் கூடியதாக உள்ளதல்லவா? நீங்கள் பேறு பெற்றவர்கள்.

அன்பின் தேவபிள்ளைகளே! இன்றைய வேத வசனம் ஏசாயா 35:7 இன்படி தேவன் உங்களை "வெட்டாந்தரை தண்ணீர் தடாகமாகவும் வறண்ட நிலம் நீரூற்றுகளுமாக" மாறுவது போல் உங்கள் வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படும் என்று கூறுகிறார். இதுபோல் மாற்றத்தைக் கொண்டு வர எமது தேவனால் மாத்திரமே முடியும். "நான் வனாந்திரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்" (ஏசாயா 43:19) என கூறியுள்ளார். மனிதர்களுடைய வாழ்க்கையில் சந்தோஷம் சமாதானம் இல்லாவிட்டால் எம் உள்ளத்தில் விரக்தி என்னும் வனாந்திரம் ஏற்படும். வீட்டிலே வறுமை இல்லாமை, வியாதிகள், வருத்தங்கள் ஏற்படின் வீடே அவாந்தரவெளியாக காணப்படும். ஏற்றகாலத்தில் திருமணங்கள் கைக்கூடாமல், பிள்ளைப்பாக்கியமில்லாமல் இவைகளும் வாழ்வை வனாந்தரமாகக்கூடும். இவைப்போன்ற காரியங்களால் உங்கள் ஜீவியத்திலும் வனாந்தரங்களும் அவாந்திர வெளிகளுமாக காணப்படுகிறதா? கலக்கமடையாதிருங்கள், உங்களை நேசிக்கும் உங்கள் மீது நோக்கமாயிருக்கும் தேவனானவர் உங்களோடிருக்கிறார். அவர் வாக்கு மாறாதவர். சர்வ பராக்கிரமுள்ளவர். அவர் உங்கள் பிதாவாக இருப்பதால் அவர் உங்கள் வாழ்க்கையை மாற்றியமைப்பார். விசுவாசித்து அற்புத மாற்றங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! வனாந்திரத்தை தண்ணீர்த்தடாகமாகவும் வறண்ட நிலத்தை நீர்கேணிகளுமாக்குவேன் என்றவர் உங்கள் வாழ்வில் வசந்தத்தைக் காணச் செய்வார். அநேக காரியங்களால் சிறைப்பட்டு போய் வனாந்தரமே வழியாய் மாறிப்போயிருந்தாலும் புதிய மார்க்கங்களையும் புதிய காரியங்களையும் உருவாக்கி உங்களை விடுவித்து அசீர்வதித்து காத்திடும்படி தேவன் உங்கள் மத்தியில் இருக்கிறார். விசுவாசித்து இடைவிடாமல் ஜெபித்து வற்றாத நீரூற்று போன்ற தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள் மகிழ்ச்சியின் நாள்.



என் வாழ்வில் பெரியகாரியங்களை காணச்செய்யும் என் அற்புதத்தகப்பனே வறண்ட நிலத்தை நீர கேணியாக மாற்றுபவரே. வறண்டு போய் கிடக்கும் என் வாழ்வையும் ஆசீர்வதித்த்து தண்ணீர தடாகமும் நீர் ஊற்றுமாக மாற்றி தரம்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி,
மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி,
உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும்,
வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய். ஏசாயா 58:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 16
செவ்வாய்

# நன்மைகள் நிறைந்த இன்றைய தினம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டதே !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் 21 - 22

**"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்."**
(சங்கீதம் 118:24)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே, இன்றைய நாளை "தேவன்" உண்டாக்கின படியால் "இன்றைய நாளில் சுபகாரியங்கள் நடைப்பெற வேண்டுமென பிரார்த்திக்கிறேன். இன்றை நாளை உருவாக்கிய தேவனைக் குறித்து அறிந்து "நாளை" ஆரம்பிக்கும் முன்னதாக உங்கள் அனைத்துக் காரியங்களையும் ஆரம்பிக்கும் முன்பு முதன் முதலாக "நாளை" உருவாக்கியவருக்கு ஸ்தோத்திரம்பண்ணி ஆராதித்து நாளின் சகல காரியங்களையும் அவருக்கு ஒப்புவித்து அவர் பேரில் விசுவாசம் வைத்திருக்கும் நீங்களனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆகையால் "நீங்கள் மனங்கலங்காதிருங்கள்". உங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து இன்றைய நாள் முழுவதும் உங்களோடிருப்பாராக!

தேவ பிள்ளைகளே 24 மணித்தியாலத்திற்குள் உலகம் முழுவதும் என்ன நடைப்பெறப் போகின்றதென்பதை நாம் அறியோம். அப்படியே அந்நாளில் நடைப்பெறுகின்ற நன்மையான காரியங்கள், துக்ககரமான காரியங்கள் எவ்வளவு என்பதையும் நாம் அறியோம். ஆனாலும் எங்கள் "படைப்பின் தேவன்" எல்லாவற்றையும் நன்கறிவார். நீங்கள் தேவனின் சொந்தப் பிள்ளைகள் என்றபடியால் தேவன் உங்களைப் பராமரிக்கும் தேவனாகையால் தேவன் பிறப்பித்த இந்நாளில் உங்களுக்கு எந்தவிதமான அசுபகாரியங்கள், தீமையான காரியங்கள் நடைப்பெறப் போவதில்லை. தேவனின் பிள்ளைகளாகிய நாங்கள் இன்றைய நாளில் "அதிவிஷேசித்தவர்கள்" ஆவோம். தேவனுக்குள் பலவிதமான வேதனைகள், உபத்திரவங்கள், பிரச்சினைகள், சவால்களின் மத்தியில் கண்ணீர் பள்ளத்தாக்கில் பயணம் செய்துக்கொண்டிருக்கும் உங்களைப் பற்றி அனைத்தையும் அறிந்த தேவனாக இருக்கின்றார். நீங்கள் பெலனுடன் தைரியமாக முன்னோக்கிச் செல்வீர்களாயின் சுனாமி அலைகளைப் போன்று உங்கள் தலைக்கு மேலாக பெருக்கெடுத்த உங்களை நோக்கி எதிரேவரும் எல்லாப் பிரச்சினைகள், உபத்திரவங்கள், துன்பங்கள், சவால்கள் அனைத்தையும் தேவன் மேற்கொண்டு அனைத்தையும் "கடல் அலைகள்" போலாக்கி உங்கள் பாதத்தில் மோதி பின்னோக்கிச் செல்ல தேவன் செயலாற்றுவார். ஏனெனில் நீங்கள் தேவனின் பிள்ளைகள் என்பதால் தேவன் அப்படியாக அப்புறப்படுத்துவாராக!

தேவ பிள்ளைகளே "சூரிய உதயம்", "சூரிய மறைவு" இரண்டையும் நியமித்திருக்கும் தேவன் உங்களையும் தெரிந்தெடுத்திருப்பதால் ஒன்றையும் குறித்து கவலைப்படாதிருங்கள். உங்கள் ஜீவியத்தின் காரணங்கள் மிகச் சாதாரணமானவைகள். நீங்கள் இன்று உங்கள் "இருதயத்தை ஆராய்ந்து" பாருங்கள். உங்கள் வாழ்வில் மிகச்சிறிய பிழைகள், பாவங்கள், பலவீனங்கள் இருப்பின் நீங்கள் அவற்றிலிருந்து விலகி பாவங்கள், பலவீனங்கள் என்று மாம்சத்தில் மீண்டுமாக அவைகளைச் செய்யாதபடி இயேசுவை உண்மையாய் பற்றிக்கொள்ளுங்கள். உங்கள் தேவன் "நீதியுள்ளவர், நல்லவர்" என்பதால் உங்களுக்கு சந்தோஷம், சமாதானம், சுகத்ததைப் பெற்றுக் கொடுத்து "மகிழ்ச்சிகரமாக" வழிநடத்துவார். மனமகிழ்ச்சிகரமான நாள்.

என்னுடைய பிதாவே நீங்கள் படைப்பின் தேவன் உலகில் உள்ள அனைத்தும் அவருடையது. உங்கள் ஆணையின்படி அன்று வரை எல்லாம் செயல்படுகின்றது. உங்கள் விருப்பத்தின் படி என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில்.-ஆமென்-

---

நாள் உண்டாகாததற்குமுன்னும் நானே இருக்கிறேன்;
என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?
ஏசாயா 43:13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை **17**

புதன்

## எங்கள் அவிசுவாசத்தின் காரணமாக அற்புதங்கள் செய்ய விரும்பாத தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 23 - 24

**"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை."** (மத்தேயு 13:58)

இயேசு கிறிஸ்துவினால் தமது சொந்த ஜனங்களாக தெரிந்து கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளே! இன்றைய நாளும் உங்களுக்கென்று அருமையாக சிருஷ்டித்த தேவனுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு இந்நாள் உங்களுக்கு "இனிய நாளாக" வேண்டுமென பிரார்த்திக்கிறேன். நீங்கள் இலங்கையர்கள் எனினும் படைத்த தேவனின் சொந்த பிள்ளைகளான நீங்கள் பரலோக வாசிகள் என்பதனை முதற்கண் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த "மாபெரும் வரப்பிரசாதத்தை பெற்ற நீங்கள் மிகவும் அதிஷ்டசாலிகளே"

தேவ பிள்ளைகளே! மேற்குறிக்கப்பட்டுள்ள பரி. மத்தேயு 13:58 தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளபடி மனிதர்களின் "அவிசுவாசம் காரணமாக இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்யவில்லை" என்பதாகும். இயேசு கிறிஸ்து பரத்தினின்று இறங்கிய தேவ குமாரன் என்பது எத்தனையோ சந்தர்ப்பங்களில் பல வழிகளில் முறையாகக் கூறப்பட்டுள்ளது. "நாசரேத் ஊரில்" ஜெப ஆலயங்களில் ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு இவருக்கு இந்த ஞானமும், பலத்த செய்கைகளும் எப்படி வந்தது, என இயேசுவைக் குறித்து இடறல் அடைந்தார்கள். இப்படியாக தேவன் அவர்களுக்கு வேண்டியவராக எண்ணப்பட்டபடியினால் அங்கே அவர் அநேக அற்புதங்களை செய்யவில்லை. அவர்களின் அவிசுவாசத்தின் காரணமாக தேவனின் ஆசீர்வாதத்தை அவர்கள் பெற முடியாமற் போய்விட்டது. ஒரு தந்தை தன் மகனை நேசிப்பது போல அதற்கும் மேலாக தேவன் எம்மை நேசிக்கிறார். ஆகையால் நாங்கள் எங்கள் வாழ்க்கையில் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளை பார்த்து அதன் விசாலத்தைப்பார்த்து, அவைகளுக்காக புலம்பி முறுமுறுத்து இருப்போமேயானால் அவைகளில் மீட்பு பெற முயற்சி எடுக்காவிட்டால் எங்கள் தேவன் எங்களைக்குறித்து "பிரியமாய்" இருக்கமாட்டார். ஏனெனில் "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான் பின்வாங்கிப் போனவனானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது" என்கிறார் என்று எபிரேயர் 10:38இல் காண்கிறோம்.

தேவ பிள்ளைகளே, உங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைத்து ஜீவியுங்கள். நீங்கள் அதிகமதிகமாய் தேவனுக்குக் கிட்டிச் சேர்ந்திருக்க எவ்வேளையிலும் முயற்சி செய்யுங்கள். நீங்கள் தேவனை உங்கள் முழு உள்ளத்தோடு விசுவாசித்து உங்கள் வாழ்க்கையில் எல்லா காரியங்களையும் தேவனின் பாதத்தில் வைத்து நீங்கள் பெலனோடு தைரியமாக முன்னோக்கி பயணம் செய்யுங்கள். இன்றும் எந்நாளும் தேவன் உங்களோடு கூட இருப்பாராக! உங்கள் இயேசுகிறிஸ்து எல்லாவற்றிலும் உங்களுக்கு "வெற்றி" பெற்றுத் தருவாராக! உங்கள் வாழ்வில் "பெரிய அதிசயங்களைச்" செயல்படுத்துவாராக!" வெற்றிமிகு நாள்.



என் தேவனே உங்கள் தேவகுமாரனுக்காக ஸ்தோத்தரிக்கிறேன். தேவன் இப்பொழுது என்னோடு இருக்கிறார். தேவனே, நான் உங்களை முழு மனதோடு விசுவாசிக்கிறேன். நீங்கள் எனக்குள் ஆச்சரியமானவைகளை செயல்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில்.

–ஆமென்–

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ,
அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்,
அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். மாற்கு 11:24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை **18**

வியாழன்

**தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி நித்திய உடன்படிக்கையை கட்டளையிட்ட தேவன் !**

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் 25 - 26

**"அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி, தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார்; அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது."** (சங்கீதம் 111:9)

தேவனுக்குள் அன்பான என் தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அருமையான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். முழு உலகினையும் காண்கின்ற அனைத்தையும் படைத்து நிர்வாகம் செய்கின்ற சர்வ வல்ல தேவன் உங்களைக் குறித்தும் பூரண பொறுப்பை தான் எடுத்துக் கொண்டுள்ளமையால் இன்றைய நாளில் நீங்கள் எதைக் குறித்தும் கவலைக் கொள்ளாதீர்கள். தேவன் உங்களைக் குறித்தும் உங்கள் குடும்பத்தில் அனைவரையும் குறித்து அனைத்து ஒழுங்கு முறைகளையும் நடைமுறைப்படுத்தி விட்டாரென நீங்கள் விசுவாசியுங்கள்.

தேவ பிள்ளைகளே! முழு உலகினையும் அங்கே செயற்பாடுகளனைத்தையும் நோக்குமிடத்து, சில சந்தர்ப்பங்களில் விஞ்ஞானிகளால் கூட உண்மையான காரியங்களையும் அதன் நடைமுறைகளையும் யூகிக்க முடியாத வண்ணமாக அவைகள் அவர்களுக்கு "சவாலாகி" விடுவதைக் காண்கிறோம். ஆனாலும் தேவ பிள்ளைகளே! எங்கள் சிருஷ்டிப்பின் தேவன் எல்லாவற்றையும் செய்து முடிக்கும். "மகா வல்லமையுடைய தேவனாவார்". அவர் படைத்த மனிதனும் அவனது செயற்பாடுகளும் மிகவும் ஆச்சரியமானவைகள். அவர் படைத்த மனிதனது உடம்பிற்குள் ஓடும் இரத்தத்தை ஆராயுமிடத்து உலகில் யாருக்குமே மனித இரத்தத்தில் ஒரு துளியைக்கூட உருவாக்க, செய்து முடிக்க இயலாதென்பதை நீங்கள் அறிவீர்களா? "மனிதனின் இரத்தம் தேவனுடைய பார்வைக்கு அருமையாயிருக்குமென்றும், அவர்களின் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும், கொடுமைக்கும் தப்புவிப்பார்." சங்கீதம் 72:14இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் மகத்துவமான தேவ பிதாவானவர், உங்களை அதிகமாக நேசிக்கின்றபடியால், உங்கள் வாழ்க்கையில் எந்தவித அசம்பாவிதங்கள், ஆபத்துக்கள் நேரிடுவதற்கு ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டார் என்பதை நீங்கள் "விசுவாசிக்க" முடியும். உண்மையிலேயே தேவன் உங்களை உருவாக்கிய தேவபிதாவாகையால் அவரின் படைப்பின் பிள்ளைகளான உங்கள் அனைவரையும் தேவன் "பராமரித்து" வழிநடத்துவார்.

தேவ பிள்ளைகளே, மேற்கூறப்பட்ட சங்கீதம் 111:9இல் எழுதப்பட்டுள்ளது "தேவன் தமது ஜனங்களுக்கு மீட்பை அனுப்பினார்" என்றாகும். தேவன் தனது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள். இன்றைய நாளில் உங்கள் வாழ்வில் காணப்படும் நோய்கள், உபத்திரவங்கள், பொருளாதாரத் தடைகள், பிரச்சினைகள், துன்பங்கள் என்பவற்றிலும் சவால்கள், மனச்சஞ்சலங்களினின்று உங்களை மீட்டுக் கொள்வதற்கு தேவன் செயல்களை மேற்கொள்வாராக! அவைகள் உங்களுக்கு தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகளா? தேவனுக்கு நீங்கள் அனைத்தையும் "ஒப்புவிக்கும்" போது தேவன் அவைகளுக்கு "பதில்" கொடுத்து கிரியை செய்வாராக உங்களுக்கு வெற்றிகரமான நாள்.



என் தேவனே "நீங்கள் உங்கள் சொந்த ஜனங்களுக்கு மீட்பு கொடுக்கும் தேவனானவராகையால் ஸ்தோத்திரம். நீங்கள் என்னைப் படைத்த தேவனும் நான் உங்கள் படைப்பின் பிள்ளைகளுமாய் இருப்பதால் என் வாழ்க்கையை உங்களுக்கு ஒப்புவிக்கின்றேன். உங்கள் உடன்படிக்கையின் படி எனக்கு மீட்பு பெற்றுத் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

---

அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்;
கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து,
தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்;
கர்த்தரே இதைச் சொன்னார். ஏசாயா 25:8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 19
வெள்ளி

## உங்கள் வனாந்தர வாழ்க்கையை செழிப்பாக மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் 27
எண்ணாகமம் 01

**"வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கருவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்."** (ஏசாயா 35:1)

எனக்கன்பான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கிற தேவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இன்று "சகல வழிகளிலும் ஆசீர்வாதம் நிறைந்த நாளாக" வேண்டுமென்று வாழ்த்துகிறேன். மகத்துவமான, வல்லமையான தேவனைத் தேடும் பிள்ளைகளாகிய நீங்கள் உண்மையோடும் முழு இருதயத்தோடும் பரிசுத்தத்தோடும் தேவனைத் தேடுகிற தேவபிள்ளையாதலால் உங்களைக் குறித்து இன்றைய நாளில் தேவன் "விஷேட" கவனத்தை உங்கள் மேல் கொண்டுள்ளார், என்பதில் எவ்வித ஐயமுமில்லை நீங்கள் தேவனாகிய கர்த்தர் பேரில் அன்பு கொண்டு அவருடைய கட்டளைகளில் நிலைத்திருப்பீர்களானால் உங்கள் ஆயிரம் தலைமுறை வரை உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற தேவன் என்று உபாகமம் 7:9 இல் எழுதப்பட்டுள்ளது.

தேவபிள்ளைகளே! மேற்குறிப்பிடப்பட்ட வேதாகம பிரதான வசனமாகிய ஏசாயா35:1 இல் கூறப்படுகிறதாவது வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து கடுவெளி களித்து புஷ்பத்தை போல் செழிக்கும் என்பதாகும். இங்கே வறண்ட நிலம் என்பதின் வெளிப்பாடு அனைத்தும் வறுமைக்குத் திரும்பி எல்லா முயற்சிகளும் தோல்வியுற்று வீணாகி எல்லா வழிகளிலும் பின்னாகி, பின்மாற்றமடைந்த ஜீவியத்தையே கூறுகிறது. இன்றைய நாளில் ஜீவ மன்னாவின் செய்தியை வாசிக்கிற நீங்கள் இவ்வண்ணமாக வாழ்க்கையில் வறுமை நிலையை அடைந்து அனைத்திலும் தோல்வியடைந்து வாழ்க்கையில் பின்மாற்றமடைந்துள்ளீர்களா? "ஆனபடியால் நீங்கள் நான் எப்படி வாழ்ந்தேன்?" எனக்கு ஏன் இப்படி நிகழ்ந்தது?" என்று நினைத்து உள்ளங் கலங்கி நிற்கின்றீர்களா? ஆனாலும் நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள். வனாந்திரமாக வறண்டு போன உங்கள் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியை கொடுக்க தேவன் வல்லமையுள்ளவர். நீங்கள் தேவன் பேரில் விசுவாசம் வைத்து கலங்காதிருங்கள். இன்றைய தினமதிலும் உங்கள் வாழ்க்கையிலும் உங்களுக்கு அற்புதம் செய்து உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க தேவனால் அனைத்து செயல்களையும் செய்ய முடியும்.

தேவபிள்ளைகளே, சங்கீதம் 30:11 இல் தாவீது அரசன் "என் புலம்பலை ஆனந்த களிப்பாக மாறப்பண்ணினீர்" என்று கூறுகிறார். அவர் அவ்வாறு எழுதியது தேவனாகிய கர்த்தர் அவரது வாழ்க்கையிலே காணப்பட்ட அனைத்து துன்பங்களையும் எடுத்து விட்டு அவரது வாழ்க்கையில் "சந்தோஷத்தைக் கொடுத்தமையல்லவா?" உங்கள் தேவன் தாவீதின் தேவனாயிருக்கிறார். உங்களது அனைத்து காரியங்களையும் தேவனுக்கு அர்ப்பணித்து ஜெபியுங்கள். தேவன் வறண்டு போன உங்கள் வாழ்க்கைக்கு ஆசீர்வாதம் என்னும் மழையை பெய்வித்து உங்களை மகிழவைப்பார் "உங்களுக்கு வெற்றியின் நாள்"



**என்பிதாவே, நீங்கள் வறண்ட தேசத்தையும் வனாந்தரத்தையும் செழிப்பாக்கும் தேவன். என் தேவன் என் வறண்ட வாழ்க்கையை அறிந்தவராக இருக்கிறீர்கள், நான் அவைகளை உமக்கு ஒப்புவிக்கிறேன். உங்கள் ஆசீர்வாதத்தை அனுப்பி என்னை சந்தோஷப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–**

---

சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்;
அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து,
உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார். யோவேல் 2:23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 20

சனி

**தேவன் பேரில் மாத்திரம் நம்பிக்கை கொள்வது உங்களுக்கு நன்மையே !**

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 02 - 03

**"பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்."**
(சங்கீதம் 118:9)

அருமையான தேவபிள்ளைகளே ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் "இன்றைய நாள் மகிழ்ச்சிகரமான நாளாகவேண்டுமென்று" பிரார்த்திக்கிறேன். உங்களை சிருஷ்டித்த தேவனை அறிந்து தேவன் பேரில் மாத்திரம் விசுவாசம் கொள்ளும் நீங்கள் அனைவரும் மிகவும் "அதிஷ்டமானவர்கள்" உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் பயணிக்கும்போது பாதையில் மிகவும் கஷ்டமான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. அப்பொழுது ஒரு மனிதனுடைய உபகாரத்தை நாடுவதற்கு அவசியமேற்படுகையில் "நீங்கள் எந்தவொரு மனிதனுடைய முயற்சியையும் பெற்றுகொள்ள முயற்சி செய்யாது" தேவன் பேரில் விசுவாசம் வைத்து தேவனுடைய துணையை பெற்றுகொள்வது மேலானதும், நன்மையானதுமென சங்கீதம் 118:9 இல் அதாவது பிரதான வேதாகம வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை மேலே காணலாம்.

தேவபிள்ளைகளே, "சங்கீதம் 118:9 அவ்வாறு எழுதப்பட்டது பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலாகும். அவர்கள் வாழ்க்கையில் அவர்கள் பெற்றுகொண்ட அதிவிசேடமான ஆத்மீக அனுபவங்களில் மூலமே. ஆகையால் அனைத்தும் உண்மையான வசனங்களானபடியால் தேவன் பரிசுத்த வேதாகமத்தினுள்ளடக்க அனுமதி அளித்திருககிறார். ஆகையால் பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்திய வசனங்களை விசுவாசிக்கும் நீங்கள் அனைவரும் மனிதர்கள் மத்தியில் "அதி விசேஷித்தவர்கள்" அங்கே விசேஷமாக கூறப்பட்டுள்ளதாவது பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும் என்றாகும். அதன் கருத்து என்னவெனில் மனிதர்கள் மத்தியில் பணக்காரர்கள், பிரபுக்கள், அரசியல்வாதிகள், நாங்கள் உயர்ந்த அந்தஸ்துடையவாகள் என்று கணிக்கும் மனித உயர் அதிகாரிகள் மீது நம்பிக்கை வைப்பதை பார்க்கிலும்" என்பதாகும். அவ்வண்ணமே சங்கீதம் 146:3-4 இல் பிரபுக்களையும் இரட்சிக்க திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும். அவன் தன் மண்ணுக்கு திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம். என்று எழுதப்பட்டள்ளது. என்றாலும் நீங்கள் கலங்காதிருங்கள்." ஐயோ எனக்கு உதவுவார் யாருமில்லையே, எனக்கு யார் துணை? என்று உங்களுக்குள் நீங்கள் நினைக்கக்கூடும் நாங்கள் முழு விசுவாசத்தோடு அவர் என்றால் எனக்கு துரோகம் செய்யமாட்டார்" என மனிதனை நம்பினீர்களா? ஆனாலும் மனிதன் அநேக வேளைகளில் எங்கள் "நம்பிக்கையை" இழக்கச்செய்து விடுவார்கள். ஆனாலும் உங்கள் தேவன் ஒரு நாளும் உங்கள் நம்பிக்கையை வீணாக்கி இழக்கச்செய்து உங்களை மறந்துவிடவும் மாட்டார்.

தேவ பிள்ளைகளே, என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் 29 வருட காலத்திற்குள் தேவன் என்னைக் கைவிட்டார் எனக்கூற ஒரு நாளும் கிடையாது. என்னைப்போன்று நீங்களும் தேவனின் முன்னிலையில் மிகவும் அருமையானவராகுவீர்கள்" ஆகையால் அவர் பேரில் நம்பிக்கை வைத்து உங்கள் சகல பிரச்சினைகளையும் அவருக்கே ஒப்புக்கொடுங்கள். "வெற்றிகரமான நாள்"



என் தேவனே! நீங்கள் அளவுக்கடந்த அன்பை எங்கள் பேரில் வைத்துள்ளமையை நான் அறிவேன். நீங்கள் என்னை வெட்கப்படுத்த விடமாட்டீர்களென உங்கள் பேரில் விசுவாசம் கொள்கிறேன். தேவனே இன்றைய நாளிலும் உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். – ஆமென்–

---

கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து,
கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
எரேமியா 17:7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 21

ஞாயிறு

## உள்ளார்ந்த அன்பைத் தேடும் நம் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 04 - 05

**"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது."** (ஏசாயா 29:13)

எனக்கருமையான தேவ ஜனங்களே, ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் "இந்த நாள் நல்ல நாளாக வேண்டுமென்று ஜெபிக்கிறேன்" எங்கள் "தேவன் ஒரு தெய்வம்" மாத்திரமல்ல "அன்புமிகு அப்பா" என்றும் கூற முடியும். ஏனென்றால் மாம்சமான எங்கள் அனைவரையும் சிருஷ்டித்த தேவன் அவரேயாகும். தேவன் "புத்திரசுவிகாரத்தின் ஆவியை எங்களுக்கு பெற்றுதந்து" தேவன் எம்மை சொந்தப் பிள்ளைகளாக்கிக்கொண்டார். ஆகையால் அவர் எங்கள் பரலோக பிதாவானவர்.

தேவ பிள்ளைகளே, பரிசுத்த வேதாகமத்தில் எரேமியா 31:3 இல் அநாதி சிநேகத்தால் உங்களை சிநேகித்தேன் என்று தேவன் சொல்லுகிறார். அப்படியானால் தேவன் "அன்பான அப்பா" அல்லவா? அப்படியே நாம் ஒவ்வொருவரும் "கண்ணின் கருமணி என்றும்" கூறியிருக்கிறார். எங்களை குறித்து எவ்வளவாய் தேவன் அக்கறைக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது. தேவ பிள்ளைகளே, நான் அதிகாலை ஜெபம் பண்ணிக்கொண்டிருந்த வேளையில் அதாவது அதிகாலை 2.45 மணிக்கு தேவன் "நீ ஜெபிக்கும்போது உரிமையோடு ஜெபி" என்று சொல்லுகிற குரல் எனக்கு கேட்டது. அப்பொழுது அதனை என்னாலே கிரகித்து கொள்ள முடியவில்லையாயினும் அதனைக் குறித்து சிந்தித்த போது எனது உள்ளத்தில் எழும்பிய சிந்தனை என்னவென்றால் எங்கள் தேவனுக்கு ஜெபங்களை ஏறெடுக்கும் போது "என்னுடைய அப்பாவே என்று தேவனை அழைக்கும் வேளையில் எமது முழு உள்ளத்திலும் அன்போடு பாச உணர்வோடு அவரை அழைக்க வேண்டும். தேவ பிள்ளைகளே, கலங்காதிருங்கள். பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்த மத்தேயு 12ம் அதிகாரம் 46 முதல் 50ம் வசனம் வரையில் வாசித்துப் பார்க்கும் போது இயேசு கிறிஸ்துவின் சகோதர சகோதரிகள் யாரென்று எழுதப்பட்டுள்ளது. ஏனென்றால் "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்ததின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்கு சகோதரனும் தாயுமாயிருக்கிறார் என்றார்"

தேவ பிள்ளைகளே, இதற்கூடாக நாம் காணபது தேவனின் சகோதர, சகோதரிகளானாலும் அவர்கள் பரலோகத்தில் வாசம் பண்ணுகிற தேவன் பேரில் அன்பு கொள்ளவிடின் அவர்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கமாட்டார். எங்கள் முழு "இருதய பூர்வமான" அன்பின் பாச உணர்வை தேவன் எதிர்பார்ப்பதை இதிலிருந்து வெளிப்படுத்துகிறது. ஆனாலும் நீங்கள் தேவன் சிருஷ்டித்த பிள்ளைகளாதலால் நீங்கள் என்ன நிலையிலிருந்தாலும் தேவன் உங்களை புறம்பே தள்ளமாட்டார். தேவன் உங்கள் பிரச்சினைகள் துன்பங்களிலிருந்து உங்களை மீட்டுக் கொள்வாராக! "வெற்றியின் நாள்."



என் பிதாவே! என் பரலோக பிதாவாக இருக்கிறீர்கள். என்னைத் தெரிந்து கொண்டு என்னை அநாதி சிநேகத்தால் அன்பு செய்கிறீர்கள். ஆண்டவரே என் இதயபூர்வமான அன்பை எதிர்பார்க்கிறீர்கள். அப்படியே நான் ஆகும்படி எனக்கு தயை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

...அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக;
உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும்
உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு
உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார். உபாகமம் 13:3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 22

திங்கள்

## உங்களுக்கு பூமியில் சகல அதிகாரங்களையும் கொடுத்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 06 - 07

**"பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."**
(ஆதியாகமம் 1:28)

தேவனுடைய அன்பினால் நிறைந்திருக்கும் அருமையான தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு "நலமிகு நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்." தேவனின் வல்லமை அதிகாரத்தின்படி தேவனின் கட்டளையின் படியே இப்பூமியில் அனைத்தும் நிகழ்கின்றது என்பது நாம் நன்கறிந்ததே. ஆகையால் தேவனின் அநுக்கிரகத்தின்படி எல்லாம் நன்மையாகவே நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! காட்டில் வசிக்கின்ற மிருகங்களின் மத்தியில் விசாலமான மிருகம் "யானை" ஆகும். அப்படியான பெரிய மிருகத்தை எங்களைப் போன்ற "மனிதர்கள்" மூலமாக வழிநடத்தப்படுவது மிகவும் புதுமையே. சிலர் கூறுவதென்னவென்றால் யானையானது தனது சரீரத்தின் பெரிதான தோற்றத்தைக் குறித்து அறியாது. ஆகவே தான் அது மனிதர்களுக்கு பயப்படுகிறது என்றாகும். இருந்த போதிலும் எம்மை சிருஷ்டித்த தேவன் ஆண், பெண் என்ற இரு மனித வர்க்கத்தினரையும் படைத்து ஆசீர்வதித்து "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்" என்று கூறினார். ஆகையால் மனிதர்களுக்கு இப்படியாக யானைகளைக் கூட வழிநடத்தவும், மேற்கொள்ளவும் முடிந்தது. இவை அனைத்தையும் செய்ய இயலுமானது ஆதியாகமம் 1:28இல் கூறப்பட்ட தேவ வசனத்தின் படியேயாகும். தேவனின் அனுமதி இல்லாமல், தேவனுக்குத் தெரியாமல் எதுவுமே நிகழ்வது இல்லையென்பது தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளமையால் நீங்கள் தேவனின் வசனத்திற்கு மேலாக எதுவும் நடைப்பெறாதென்பதை எல்லா வேளையிலும் விசுவாசியுங்கள்.

தேவ பிள்ளைகளே உங்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்து உங்களுக்கு கொடுத்துள்ள "அதிகாரங்கள், ஆளும் வல்லமைகள்" என்பவற்றைக் குறித்து நீங்கள் நன்றாக ஜெபம் செய்து தேவனுக்குள் உங்கள் வல்லமையை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அதிகதிகமாக தேவனுக்குள் "பெலப்படுத்திக் கொள்ளுங்கள்". உங்கள் உள்ளத்தின் விருப்பங்களின்படி நடந்து கொள்ள இடங்கொடாது உங்கள் தேவனின் சித்தத்தின்படி உங்களை வழிநடத்த உங்கள் உள்ளத்தை தேவனுக்கு "அர்ப்பணியுங்கள்". நீங்கள் எதைக் குறித்தும் கவலைப்படாதீர்கள். இன்றைய நாளில் உங்களுக்கு பெரிய பிரச்சினைகள், சிக்கல்கள், சவால்கள் முகங்கொடுக்க நேரிட்டாலும் "பயப்படாதீர்கள்". இன்றைய நாளில் உங்கள் எல்லாப் பிரச்சினை, துன்பம், வேதனைகள் அனைத்திற்கும் "இயேசுவின்" மகத்தான நாமத்தைக் கூறி உங்கள் வாழ்க்கையினின்று எல்லாம் அகன்று போகும்படியாக "கட்டளையிடுங்கள்". இன்று வெற்றியின் நாள்.



*என் தேவனே! நீங்கள் சர்வ வல்லமையுடையவர். உங்கள் பிள்ளைகளாகிய எங்களுக்கு இப்பூமியில் உள்ள சகலவற்றையும் கீழ்ப்படுத்த அதிகாரங்கள் கொடுத்துள்ளீர்கள். என் பிதாவே உங்கள் பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பி இன்னும் அதிகமாக ஆவியில் நிரப்புங்கள் இயேசுவின் நாமத்தில்.~ஆமென்~*

---

*நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.
உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து,
சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். சங்கீதம் 8:5,6*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 23

செவ்வாய்

## சிறையிருப்பிலிருந்து மீட்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 08 - 09

**"நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்."**
(அப்போஸ்தலர் 16:25)

பாசமிகு தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு நன்மையான நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். ஜீவமன்னா தினதியானங்களுக்கூடாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைவதோடு முதற்கண் என் தேவனுக்கு நன்றி கூறுகின்றேன். சர்வ வல்லமையுடய சிருஷ்டிகரின் "தேவ வசனங்கள்" வல்லமையாக இன்றும் "செயலாற்றல்" மிக்கதாக இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவன் கருத்தான உவமையோடு கூட எங்களோடு பேசினார். அதை இன்றைய நாள் செய்தியாக தேவன் எழுதுவதற்கு என் உள்ளத்தில் ஏவுதலைக் கொடுத்தப்படியால் இதை எழுதுகின்றேன். தேவ பிள்ளைகளே! உங்களுக்கு உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது செயலற்றிருக்கும் போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய வேளையில் என்ன செய்வது? நீங்கள் ஆவிக்குரிய பிள்ளைகளாயினும் உங்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். தேவன் இதற்கு வெளிப்படுத்திய உவமை "சிறிய எலியின்" கதையொன்றாகும். "எங்களுடைய வீட்டில் உணவுகளை தயாரிக்கும் பொருட்கள் அடங்கிய பலகைப் பெட்டியொன்றில் உள்ளே சென்ற எலி திரும்பி வெளியே வரமுன்னர் நாங்கள் அதை மூடிய வேளை அதனுள் அது சிறைப்பட்டு விட்டதைக் குறித்தாகும்." தேவ பிள்ளைகளே! சுதந்திரமாக இங்குமங்குமாக ஓடித்திரிந்துக் கொண்டிருந்த எலிக்கு என்ன நடந்தது? அது தெரியாமலேயே கனமான பலகையில் தயாரிக்கப்பட்ட பெட்டியினுள் சிறைபட்டு விட்டது. தேவனுடைய படைப்பில் அதி விஷேசத்துவம் என்னவெனில் அது அப்படி சிறைப்பட்டதா? இப்போது அனைத்தும் முடிந்தது, நான் அழிந்துவிட்டேன். இனிமேல் எனக்கு மீட்பே கிடையாது என்று நினையாமல் அதனது சிறிய கூர்மையான பற்களினால் பலகையை கடித்து ஒரு துவாரத்தைச் செய்து அதிலிருந்து எப்படியாவது வெளியே வருவது, நான் இந்த இக்கட்டான நிலையினின்று "விடுதலை" பெற வேண்டும் என்னும் முயற்சியை மேற்கொண்டதனாலேயாகும்.

தேவ பிள்ளைகளே! இப்படியாக மணித்தியாலக் கணக்கில் எலி தனது பிரச்சினையினின்று விடுதலை பெறுவதைப் போன்று "நீங்களும்" உங்கள் பிரச்சினைகள், சிக்கல்கள், கஷ்டங்கள் ஆகியவற்றிலிருந்து மீட்பு "முயற்சி" செய்யுங்கள். பிரச்சினைகள் உங்களை மேற்கொள்ள விடாது நீங்கள் பிரச்சினைகளை முழங்கால் ஜெபம், உபவாசம் ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்தி "யுத்தம்" செய்து வெற்றி பெறுங்கள். எவ்வளவாக துன்பங்கள் பெறுகினாலும் "சோர்வு" அடையாதீர்கள். பவுல் அடியார், சீலா சிறையிலிருந்து துதிக்கின்ற போது தேவன் அதிலிருந்து மீட்டார். நீங்களும் துன்பங்களினின்று மீட்படைய தேவனை அதிகமதிகமாக கிட்டிச் சேருங்கள். "உங்களுக்கு வெற்றிகரமான நாள்".



என் பிதாவே! இன்றைய நாளில் நீங்கள் எனக்குக் கொடுத்த வசனத்திற்காக நன்றி. நீங்கள் என் தகப்பன் என்றபடியால் நான் பிரச்சினைகளில் சோர்வுற மாட்டேன். என்னுடைய மனம் பலவீனமானது. ஆகையால் தேவனே என்னை பலவானாக மாற்றும் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். ஏசாயா 65:24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 24

புதன்

# உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 10 - 11

**"நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ள நியாயாதிபதியாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர்."** (சங்கீதம் 9:4)

அன்பான தேவபிள்ளைகளே, ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். சங்கீதம் 9:10இல் "கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுவதில்லை. ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்" என்று எழுதியிருப்பதனால் சர்வ வல்லமையுள்ள ஜீவிக்கின்ற சிருஷ்டிப்பின் தேவப் பிதாவை பற்றி அறிந்து கொண்டுள்ள நீங்கள் அனைவரும் "ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்." அத்தோடு "பாக்கியவான்களாய்" இருப்பீர்கள்.

தேவ பிள்ளைகளே மேற்குறிப்பிட்ட சங்கீதம் 9:4இல் குறிப்பிடப்படுவது உங்கள் தேவன் உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுவார். தாவீது இராஜா கூறியிருப்பதாவது "நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து நீதியுள்ள நியாயாதிபதியாய்ச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறீர்" என்றாகும். "நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்!" உங்கள் தேவன் தாவீது இராஜாவின் தேவனாக இருக்கின்றார். தேவன் இன்றும் "ஜீவிக்கின்றவராகவே" இருக்கின்றார். நீங்கள் தாவீது அரசனைப் போன்று உங்கள் முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், பூரணபுத்தியுடன் உங்கள் தேவனைத் தொழுதுக் கொண்டீர்களாயின், மாசற்ற முழு உள்ளத்தோடும் அன்பு வைத்தீர்களானால் தாவீது இராஜாவோடு இருந்ததைப் போல உங்களுடனும் இருப்பார். தேவன் உங்களைப் பெயர் சொல்லி அழைத்தது வெறுமனே அல்ல. உங்களைக் குறித்து அநேக நன்மையான திட்டங்களை அத்தோடு உயர்ந்த ஆலோசனைகளை தன் வசம் வைத்து அவைகளை ஒவ்வொன்றாக உங்கள் வாழ்வில் நிறைவேற்றி அனைத்து ஜாதிகளின் மத்தியில் உங்களை உயர்த்த தேவன் செயல்படுவாராக!

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் உங்களால் செய்து முடிக்க வேண்டிய அவசியமான காரியங்கள் எவ்வளவு பெரிதாக இருப்பினும் நீங்கள் பயப்படாதீர்கள். அவைகளை நிறைவேற்றுவது எப்படி என எண்ணி கவலைப்படாதீர்கள். "அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக" என்று சங்கீதம் 20:4இல் எழுதப்பட்டுள்ளமையால் உங்கள் காரியங்கள் "நன்மையானவைகளெனின்" அவைகளை தேவன் உங்கள் வாழ்வில் நிறைவேற்றுவார். காரியங்கள் நிறைவேறாவிட்டாலும் துக்கப்படாதீர்கள். அதைவிட மேலான உயர்ந்த ஆலோசனைகளை தேவன் உங்கள் மீது வைத்துள்ளார் என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் ஒன்றை நீங்கள் கேட்கும் முன்னரே தேவன் உங்கள் தேவையைக் குறித்து அறிந்து கொண்டுள்ளார். ஆகையால் தைரியத்துடன் முன் செல்லுங்கள். உங்களை அனைத்திலும் வெற்றி பெறச் செய்யவும், உயர்ந்த நிலையில் வைக்கவும் தேவன் செயலாற்றிக் கொண்டு இருப்பதினால் நீங்கள் "விசுவாசத்தோடு", "ஜெபம்" செய்து தேவனுக்கு கிட்டிச் சேர்ந்து தேவனோடு வாழுங்கள். தாவீதின் தேவன் உங்களோடிருந்து காரியங்களை வாய்க்கப்பண்ணுவர். "இன்று வெற்றிகரமான நாள்"!



*என் தேவனே! நீர் என் காரியங்களை வாய்க்கப்பண்ணும் தேவன். நீங்கள் என்னைக் குறித்து விஷேடத் திட்டங்களை வைத்திருக்கின்றீர்கள். உங்கள் விருப்பத்தின்படி அவைகளை என் வாழ்வில் இன்றும் நிறைவேற்றுவீர்களாக!. இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 25
வியாழன்

## எமது ஆத்துமாவை பாதுகாக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் 12 - 13

**"சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டுபோய், விடுவிக்கிறவன் இல்லாமையால், அதைப்பீறாதபடிக்கு என்னைத் தப்புவியும்."**
(சங்கீதம் 7:2)

எனக்கு அருமையான தேவபிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு "மகிழ்ச்சிகரமான நாளாக" வேண்டுமென வாழ்த்தி ஜெபிக்கிறேன். தேவன் முதல் மனிதனான "ஆதாம்" என்பவனை மண்ணினால் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான். ஆகையால் மனிதர்களாகிய எங்கள் ஆத்துமா, எங்களுக்குள் இருக்கும் ஆவியும் எம்மைப் படைத்த தேவ பிதாவுக்கே சொந்தமாகும்.

தேவ பிள்ளைகளே, மேற்கூறப்பட்ட சங்கீதம் 7:2இல் குறிப்பிடப்பட்டுள்ளது என் ஆத்துமாவைப் பிடித்துக் கொண்டுபோய் விடுவிக்கிறவன் இல்லாமையால் அதைப் பீறிப் போடுகிறான் என்றாகும். இங்கே தாவீது இராஜா கூறுவது அவரது எதிராளியையேயாகும். ஆனாலும் சங்கீதம் 7:1ல் என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன். என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும் என்று கூறுகின்றார். தேவ பிள்ளைகளே, தாவீது இராஜா எழுதியிருப்பதைப் போன்று எனக்கும் உங்களுக்கும் மனிதர்கள் விரோதமாகலாம். எங்களுக்கு விரோதமாக மனிதர்கள் எழும்பலாம். ஆனாலும் எங்களுக்கு கண்களால் காண்கின்றதைத் தவிர கண்களில் காண முடியாதபடி சத்துருவானவன் இருப்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அது எங்கள் எதிராளியான பிசாசாகும். அவனுக்கு சாத்தான் என்ற பெயருமுண்டு. இந்த பிசாசு ஆதியாகமத்தில் பாம்பு என அறிமுகப்படுத்தப்படுகிறது. எப்படியாயினும் தாவீது இராஜா கூறியது போல சாத்தான் சிங்கத்தைப் போன்று வேஷம் தரிக்கிறது என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ச்சிக்கின்ற சிங்கம்போல் எவனை விழுங்கலாம் என்று வகைத் தேடி சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் என பரிசுத்த வேதாகமத்தில் பேதுரு 8:9ல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே, மனந்தளராதிருங்கள். நீங்கள் தேவனின் சொந்த பிள்ளைகளாதலால் உங்கள் உயிர், ஆத்மா இரண்டையும் பாதுகாக்க வல்லமையாகக் கிரிகை செய்வார். உங்கள் வாழ்க்கையில் நோய்கள், துன்பங்கள், பிரச்சினைகள், சவால்கள் ஆகியவற்றை உண்டாக்கி உங்கள் ஆத்துமாவை பீறி துண்டுத் துண்டுகளாக்கி அழிவை ஏற்படுத்த தயாராக இருக்கும் எதிராளியிடமிருந்து உங்களைக் காப்பாற்றுவாராக! உங்கள் ஆபத்து'நாளில் தேவன் உங்களுக்கு அரணான - கோட்டையாக இருப்பாராக! தேவன் உங்களை அதிகமாக நேசிப்பதனால் விரோதமாக எழும்புபவர்களை எமது பட்டசத்தில் தேவனிருந்து எம்மோடு செயலாற்றுவாராக! ஆகையால் ஒவ்வொரு நாளும் ஜெபித்து வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணியுங்கள். தேவன் உங்கள் ஆத்துமாவை பாதுகாப்பாராக! உங்களுக்கு வெற்றிகரமான நாள்



என் பிதாவே, நீங்கள் என் அடைக்கலமும் என் கோட்டையும் என் பெலனானவருமாக இருக்கிறீர்கள். இன்றும் சத்துரு என் ஆத்துமாவை பீறிட அநேக முயற்சி செய்வான். ஆனாலும் பிதாவே, நீங்கள் என்னை மீட்டுக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில்.
~ஆமென்~

---

பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான். இதோ, நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன்; அதினால் அவர்கள் தங்கள் அடிமைகளுக்குக் கொள்ளையாவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை அனுப்பினாரென்று அறிவீர்கள். சகரியா 2:8,9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 26
வெள்ளி

## நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதற்கு இடங்கொடாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் 14 - 15

**"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."** (1 கொரிந்தியர் 10:13)

அன்பான தேவ பிள்ளைகளே, ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு நலமான நாளாக வேண்டுமென வாழ்த்தி உங்களுக்காக பிரார்த்தனை செய்கின்றேன். இயேசு கிறிஸ்துவின் சொந்தப் பிள்ளைகளான நாம் அனைவரும் மிகஆசீர்வாதம் பெற்றவர்களாவோம்.தேவன் எங்களுக்கேற்படும் சோதனைகளில் எங்களை மீட்கின்ற தேவன் ஆவார். மேலே குறிப்பிட்டுள்ள 1கொரிந்தியர் 10:13ல் கூறுவதாவது தேவன் எங்களைத் திராணிக்கு மேலாக சோதிக்க இடங்கொடாமல் சோதனையைத் தாங்க பெலன் கொடுத்துத் தப்பிக் கொள்ள வழியையும் ஏற்படுத்தித் தருவார் என்றாகும். ஆகையால் நீங்கள் மனந்தளர வேண்டாம்.

தேவ பிள்ளைகளே, பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலர் நடபடிகளில் 16:19ல் வாசிக்கும்போது ரோம் நகர வாசிகள் பவுலையும் சீலாவையும் பிடித்து சந்தைவெளியில் உள்ள அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்தார்கள். பிறகு அவர்கள் இருவரினதும் வஸ்திரங்களைக் கிழித்து அநேக அடிஅடித்து சிறைச்சாலையில் வைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தார்கள் என அறிகிறோம். ஆனாலும் அப்படியாக இருந்த போதிலும் அவர்களிருவரும் "அமைதியாக" இராதபடி அவர்களின் சரீர வேதனை எவ்வளவாக இருந்தாலும் நடு இரவில் அவர்களிருவரும் ஜெபம் செய்து தேவனை பாடல்கள் பாடித் துதித்தார்கள். சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் ஜெபங்கள் பாடல்களுக்கு செவி கொடுத்துக்கொண்டிருந்தார்கள். சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்றென்று எழுதப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளே பவுல், சீலா இருவரும் பட்ட அநேக அடிகளின் நிமித்தம் உடம்பு முழுவதும் காயங்கள் ஏற்பட்டிருக்கும். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் பெருகியோடி இருக்கும். அப்படி இருந்த வேளையிலும் தேவனை நோக்கி ஜெபம் செய்து பாட்டுக்கள் பாடி துதித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்களின் சிறையிலிருந்து அவர்களை மீட்டுக்கொண்டார்.

தேவ பிள்ளைகளே, இதற்கு முன்னதாக உங்களுக்கு கூறியபடி உணவுகள் போட்டு மூடி வைக்கப்பட்டிருந்த பலகைப் பெட்டியில் அகப்பட்டுக்கொண்ட எலி தனது சிறு பற்களால் துவாரம்செய்து வெளியே வந்ததைப் போன்று சிறையினுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த பவுல் சீலாவும் தேவனை பாடித்துதித்துக் கொண்டிருந்த வேளை தேவன் மீட்டுக் கொண்டார். இன்றைய நாளில் சோதனைகள் என்னவானாலும் உங்களுக்கு அதிலிருந்து மீட்பு பெற ஒரு வழியைத் தருவார். நீங்கள் தேவனை நோக்கி இடைவிடாது ஜெபியுங்கள். 1கொரிந் 10:13ல் குறிப்பிட்டபடி உங்கள் சோதனையில் மீட்பு பெற தேவன் உங்களுக்கு வழியை ஆயத்தப் படுத்தித் தருவார். "வெற்றிகரமான நாள்"



*என் தேவனே! நீங்கள் சோதனையினின்று மீட்கும் தேவன். என்னை சோதிக்கும்படி அனுமதியும் அத்தோடு எனக்கு சுமக்க முடியாத சோதனைகளுக்கு அனுமதி கொடுக்காததையும் நான் அறிவேன். தேவனே சோதனையினின்று மீட்கும்படி வழியைக் காண்பித்தருளும். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~*

---

*கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்;
அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது. சங்கீதம் 11:7*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 27

சனி

**அவருக்கு பயப்படுபவர்க்கு முடிவில்லா இரக்கத்தை அளிக்கும் தேவன் !**

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 16 - 17

**"அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது."** (லூக்கா 1:50)

அன்புமிகு என் தேவபிள்ளைகளே, ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு சந்தோசமான நாளாக வேண்டுமென வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நானே உங்களைத் தெரிந்தெடுத்தேன்" என்று தேவன் எங்களுக்கு கூறியிருக்கிறபடியால் நாங்கள் மிகவும் அதிர்ஷ்டக்காரர்களாவோம். ஏனென்றால் தேவன் எம்மை வெறுமனே தெரிந்துக் கொள்ளவில்லை. தேவனது நாமம் எங்களுக்கூடாக மகிமையடைய, கௌரவப்படுத்தப்பட வேண்டுமென்பதே நம் ஒவ்வொருவரைக் குறித்த மிக உயர்ந்த அருமையான நன்மையான திட்டங்களோடு தேவன் எம்மை தேவனது சொந்த பிள்ளைகளாக வேறுபடுத்தியுள்ளார்.

தேவ பிள்ளைகளே! பிரதான வேதாகம வசனமான பரி. லூக்கா 1:50 இல் எழுதியிருக்கிறபடி "உங்கள் தேவனது இரக்கம் தேவனுக்கு பயப்படுபவர்களுக்கு தலைமுறை தலைமுறைக்குமாயிருக்கும். ஆகையால் நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்." தேவன் உங்களை தேவனது பிள்ளையாக்கிக் கொண்டபடியால் தேவன் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டார். தேவனது கருணையானது உங்களைவிட்டு ஒரு நாளும் விலகிப்போவதில்லை. தேவன் உங்களை அளவுக்கதிகமாக நேசிப்பதனால் உங்களை மாத்திரமல்ல, உங்கள் பிள்ளைகளுக்கும் உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அதே போல் தலைமுறை தலைமுறைக்குமாக தேவனுடைய இரக்கம் நீடித்திருக்கும். ஆனாலும் மேற்குறிப்பிட்ட பரி. லூக்கா 1:50 தேவ வசனத்தின்படி பார்க்குமிடத்து அதை நீங்கள் பெற்றுக்கொள்ள இயலுமாவது நீங்கள் தேவன் பேரில் தேவ பயத்துடன் ஜீவித்தீர்களானால் மாத்திரமே என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. நீங்கள் தேவனின் வசனத்திற்கு கீழ்படிந்து, தேவனின் கற்பனைகளுக்கு ஏற்ப வாழ்க்கை நடத்தி தேவனுக்குப் பிரியமான, உண்மையான வாழ்க்கை நடத்துவீர்களெனின் உங்களுக்குள் தேவபயம் இருக்கும். அப்பொழுது வசனத்தின்படி இரக்கம் உங்களை நோக்கியிருக்கும்.

தேவ பிள்ளைகளே, தேவனின் "முடிவில்லா இரக்கம்" எங்களைத் தேடிவரும். ஆனாலும் நாங்கள் அதைத் தேடிப் போகவில்லை. தேவன் எங்களைச் சிருஷ்டித்த தேவனாகையால் எங்கள் வாழ்வினை அழிவினின்று மீட்பதற்கு, பாவத்திலும் சாபத்தினின்றும் விடுதலை பெற தேவன் தமது மேலான கருணையை எம்மீது காட்டுகிறார். ஆகையால் உங்களைத் தேடி வந்த தேவனின் கருணையை நீங்கள் இறுகப்பற்றிக் கொள்ளுங்கள். வேதத்தில் தேவனே இரக்கத்தில் ஐசுவரியவான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரக்கத்தினின்று விலகிப் போக இடங்கொடாதீர்கள். தேவனின் இந்த நிலையான இரக்கம் ஒவ்வொரு நாளும் "காலைதோறும் புதிதாகின்றபடியால்" இன்றைய நாளிலும் அதிகாலையில் தேவனின் பாதத்தில் ஜெபம் செய்து தேவனின் இரக்கத்தினை உங்களுக்குள் புதிதாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கும் குடும்பத்தில் அனைவருக்கும் தேவனின் இரக்கம் என்றும் போதுமானது. இன்று வெற்றிகரமான நாள்.



என் தேவனே, நீங்கள் அதிக இரக்கமுடைய தேவன். உங்கள் இரக்கங்களுக்கு முடிவே இல்லை. தேவனே, என் வாழ்வில் அதிகப்படியான கருணையை பெற்றுக்கொள்ள தேவபயத்தை எனக்குள் வையுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். சங்கீதம் 128:4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் 18 - 19

**"இரத்தப்பழிகளைக்குறித்து அவர் விசாரணை செய்யும்போது, அவைகளை நினைக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்."** (சங்கீதம் 9:12)

அன்புக்குரிய என் அருமை தேவ பிள்ளைகளே, ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் இன்றைய நாள் உங்களுக்கு மகிழ்ச்சியான நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். இன்றைய நாளில் உங்கள் காரியங்களை ஆரம்பிக்க முன்னதாக அதிகாலையிலேயே உங்கள் தேவனின் பாதத்தில் ஜெபங்களை ஏறெடுத்து அதன்பின்பு ஜீவ மன்னா தின தியானங்களடங்கிய நூலை கையிலெடுத்து அதை வாசிக்கின்ற படியால் நீங்கள் பெலன் பெறுகின்றீர்கள். அத்தோடு இன்றைய நாளில் தைரியமாக எல்லாக் காரியங்களுக்கும் முகங்கொடுக்க போகின்றீர்கள் என்பது எனது "விசுவாசம்" ஏனென்றால் தேவனின் வசனமானது ஜீவனுள்ளதும், வல்லமையுள்ளதுமானதால் உங்கள் ஆவி, உள்ளம், வசனத்தில் தைரியம் பெறுவதாக. அதிகமதிகமாக பெலன் கொள்ளுவதாக!

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிடப்பட்ட பிரதான பரிசுத்த வேதாகம வசனத்திற்கூடாக உங்களுக்கு கூறப்படுகின்றதாவது, "தேவன் இரத்தப் பழிகளைக் குறித்து விசாரணை செய்யும் தேவனாகையால் தேவன் சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்" என்பதாகும். தேவப்பிள்ளைகளே, சில வேளைகளில் நீங்கள் பணமில்லாத, பெரிய இலாபம் பெறும் வழியில்லாத குறைந்தது நிலையான ஒரு வருமானம் இல்லாதபடி இருக்கும் ஒருவராக இருக்கலாம். ஆனாலும் கலங்காதீர்கள். உங்கள் கூப்பிடுதலை மறவாத தேவன் என இன்று கூறுகின்றார். ஆகையால் தைரியமடையுங்கள். பெலனடையுங்கள். இன்று நீங்கள் நாளைய நாளைக் குறித்து கவலைக்கொள்ளாதீர்கள். தேவன் நாளைய நாளைக் குறித்து கவலைப்பட வேண்டாமென கூறுகின்றார். ஏனென்றால் நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் என மத்தேயு 6:34ல் கூறுகின்றார். ஆகையால் நாள் ஆரம்பிக்கும்போதே தேவன் பாதத்திலிருந்து ஜெபித்து நாளின் அனைத்து காரியங்களையும் தேவனுக்கு அர்ப்பணியுங்கள். வழமைபோல காரியங்களை ஆரம்பியுங்கள். தேவன் உங்களோடிருந்து அனைத்தையும் எந்தவித குறையுமின்றி ஆசீர்வதிப்பார்.

தேவ பிள்ளைகளே, உங்கள் பிதாவானவர் சிருஷ்டிகரான தேவனாவார். உலகம் அவருடையது. உலகிலுள்ள அனைத்தும் அவருடையதே. தேவனை நோக்கி ஜெபியுங்கள். தேவனின் ஆசீர்வாதம் உங்களுக்கு ஐசுவரியத்தைத் தரும்' என வசனம் கூறுகிறது. ஆனாலும் தேவன் இப்பூவுலக ஆசீர்வாதங்களில் மாத்திரம் எங்களை நிரப்ப முற்படவில்லை. முதன் முதலாக அவர் உங்கள் ஆத்துமாவை ஐசுவரியமாக்கவேயாகும். உங்கள் "ஆவியானது" தேவனுக்குள் பெலனடையும்போது பூவுலக "ஆசீர்வாதங்கள்" உங்களை வந்தடையும். அவைகள் உங்களுக்கு நிரந்தரமாகும். நீங்கள் விசுவாசத்துடன் இருங்கள். உங்கள் கூப்பிடுதலை மறவாத தேவன் உங்களோடிருப்பாராக! இன்று வெற்றிகரமான நாள்.



என் தேவனே, நீங்கள் ஐசுவரியத்தின் தேவன். நான் உங்கள் சொந்தபிள்ளை. உங்களுக்குள்ள யாவும் எனக்கும் சொந்தமானதென்பதை நான் அறிவேன். இன்று உங்கள் ஆசீர்வாதங்கள் என் வறுமையை நீக்கும் இயேசுவின் நாமத்தில்.~ஆமென்~

---

எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை;
சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவதில்லை. சங்கீதம் 9:18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை 29

திங்கள்

**அதிகாரமும், வல்லமையும் நிறைந்த இயேசுகிறிஸ்து !**

இன்றைய வேதவாசிப்பு

எண்ணாகமம் 20 - 21

**"எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன வார்த்தையோ ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்."** (லூக்கா 4:36)

அருமையான தேவபிள்ளைகளே ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் உங்களுக்கு "இனிதான நாளாகட்டும்" என வாழ்த்தி உங்களுக்காக தேவனிடம் பிரார்த்திக்கின்றேன். தேவனின் அதி உன்னத "கிருபை"யின் காரணமாக நாங்கள் இன்றும் புதிய நாளில் கால் வைக்கின்றோம். நாங்கள் எம்மைப் படைத்த தேவனைக் குறித்து அறிந்துக் கொண்டுள்ளமையால் நாங்கள் தேவனின் சொந்த பிள்ளைகளாக இருக்கின்ற படியால் இன்றைய நாளில் எந்த ஆபத்தும் ஒரு தீமையும் நிகழாது. ஏனென்றால் தேவன் எங்கள் கன்மலையாகவும், பாதுகாப்பு அரணாகவும், பெலனுள்ள கோட்டையுமாக இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! மேலேகுறிப்பிடப்பட்டுள்ள முக்கிய வேத வசனத்தில் கூறப்படுகின்றதாவது "உங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்து அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கு கட்டளையிடும் போது அவைகள் புறப்பட்டுப் போகிறதே" என்பதாகும். அவர்கள் அப்படியாக ஆச்சரியப்பட்டு கூறுவதற்கான காரணம் தேவன் "அசுத்த ஆவியினால்" அலைக் கழிக்கப்பட்ட ஒரு மனிதனை இயேசு அதிகாரத்தோடு "கட்டளையிட்ட"ப் படியினாலேயேயாகும். தேவனாகிய இயேசுகிறிஸ்து "கட்டளையிட்டு நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று கூறுகின்றார். அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல் அவனை விட்டு போய்விட்டது" அதன் பிறகு பரி. லூக்கா 4:36 இல் எல்லோரும் ஆச்சரியப்பட்டு "இது என்ன வார்த்தையோ ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் புறப்பட்டுப் போகிறதே என ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்." தேவ பிள்ளைகளே! "உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவ பிள்ளைகளே! உங்கள் சரீரத்தில் நோய்கள், துக்கங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி, உங்கள் வாழ்க்கையை அவைகள் மூலமாக சீர்குலைத்து உங்களுக்கு வாழ்க்கையென்றால் அது மிகவும் கசப்பானது என்றும் எனக்கு வாழ்வே "வேண்டாமென" உள்ளத்தில் "கசப்பை" உருவாக்கும் சாத்தானுக்கு இயேசுசுவாமி இன்றைய நாளில் கட்டளையிடுவாராக. அப்போழுது சாத்தான் உங்கள் வாழ்வினின்று புறப்பட்டு ஓடி விடும். நீங்கள் "இயேசு" என்னும் நாமத்தைக் கூறி உங்கள் வாழ்க்கையில் உபத்திரவத்தைக் கொடுக்கும் சாத்தானுக்கு கட்டளையிட்டு ஜெபியுங்கள். தேவனின் நாமத்தை அப்படி செயல் படுத்துவதற்கு தேவனான இயேசுகிறிஸ்து உங்களுக்கு வல்லமை, எல்லா அதிகாரங்களையும் கொடுத்துள்ளார். உங்களுக்கு "வெற்றிகரமான நாள்"



என் தேவனே எனக்காக மத்தியஸ்தராக செயல்படும் இயேசு சுவாமிக்காக நான் ஸ்தோத்தரிக்கின்றேன். தேவனே உங்கள் வல்லமையான நாமத்தைச்சொல்ல எனக்கு வரப்பிரசாதத்தைக் கொடுத்திருக்கின்றீரககள். என்னை பலப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்;
அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
சகரியா 10:12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை 30
செவ்வாய்

# வியாதிகளுக்கு கட்டளையிடும் பரிகாரி !

இன்றைய வேதவாசிப்பு
எண்ணாகமம் 22 - 23

**"அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்."**
(லூக்கா 4:39)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே, ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு நல்ல நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். இன்றைய நாளிலும் ஜீவ மன்னா தின தியானங்களுக்கூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைவதோடு தேவனுக்கு நன்றி நவில்கின்றேன். ஒவ்வொரு நாளும் தின தியானங்களில் உள்ள தேவ செய்திகளுக்கூடாக ஆவியிலே பெலன் பெறுவதையிட்டு எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆகையால் நீங்கள் மிக அதிர்ஷ்டக்காரர்கள்.

தேவ பிள்ளைகளே, எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து கலிலேயா நாட்டிலுள்ள கப்பர்நகூம் என்னுமிடத்திற்கு வந்து ஓய்வு நாளில் அங்கு ஜெப ஆலயத்தில் ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார். பின்பு அவர் ஜெப ஆலயத்தினின்று புறப்பட்டு தேவனின் சீடனாகிய சீமோன் பேதுரு வீட்டிற்குள் பிரவேசித்தார். சீமோன் பேதுருவின் மனைவியின் அம்மா கடுங்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். அவளை சுகப்படுத்தும்படியாக பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் வேண்டிக்கொண்டதன் பேரில் கடுங்காய்ச்சல் சரீரத்தினின்று அகன்று போகும்படியாகக் கட்டளையிட்டார். அப்பொழுது பரிசுத்த லூக்கா 4:39இன்படி அது அவளை விட்டு நீங்கிற்று. உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்கு பணிவிடை செய்தாள் எனக் கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே, தேவனின் அதிகாரத்தினாலும் வல்லமையினாலும் தேவன் நோய்களுக்குக் கட்டளையிடும் வேளையில் அது அப்பொழுது சரீரத்தை விட்டு நீங்கி விடுகின்றது. இன்றைய நாளில் நீங்கள் ஏதாவதொரு நோயில் கஷ்டப்படுகின்றீர்களா? இல்லாவிடின் வேதனைப்படுகின்றீர்களா? அப்படியில்லாவிட்டால் உங்கள் குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்பட்டு வேதனைப்படுகிறாரா? ஆனாலும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக. அன்று பேதுருவின் மனைவியின் அம்மாவிற்கு சுகம் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் தேவனை இறைஞ்சியது போல நீங்களும் நோயிலிருந்து சுகம்பெற இல்லாவிடின் உங்கள் குடும்ப அங்கத்தினர்கள் இயேசுவிடம் சுகம்பெற இயேசுவை நோக்கி கெஞ்சி வேண்டிக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் வேண்டுதலைக் கேட்டு உங்கள் அருகில் வந்து உங்கள் நோய் அகன்று போகும்படியாக கட்டளையிடுவார். உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் வேண்டும்போது குடும்ப அங்கத்தினருக்கும் சுகத்தைக் கொடுக்க வல்லமையானவராக இருக்கின்றார். இன்றும் பரிசுத்த ஆவியானவராக உங்கள் வேண்டுதலைக் கேட்டு இன்றும் உங்கள் அருகில் இருக்கிறார் என்று விசவாசத்தில் உறுதியாய் தரித்திருங்கள். இன்று வெற்றிகரமான நாள்.



*என் தேவனே, உங்கள் மகனான மீட்பராகிய இயேசு சுவாமியின் அருகில் எம்மை அழைத்தமைக்காக உமக்கு ஸ்தோத்திரம் உங்கள் வல்லமையாலும், அதிகாரத்தினாலும் எங்கள் நோய்களைச் சுகப்படுத்துகிற உமக்கே ஸ்தோத்திரம். –ஆமென்–*

---

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்;
கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.
யாக்கோபு 5:15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வோம் நாம் இயேசுவுக்காய் !




**"இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது."** (வெளி: 22:12)

எனக்கன்பான தேவ பிள்ளைகளே இன்றைய நாளிலும் உங்களை அதிகாலை தோறும் மலரும் புதிதான கிருபையோடு எல்லா செயல்களிலும் ஜெயம் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். இன்று இம்மாதத்தின் இறுதிநாளில் நிற்கின்றோம். மாதந்தொடக்க முதல் முடிவு வரை கர்த்தருடைய கிருபை எங்களோடு கூட இருக்கின்றபடியால் தேவனுக்கு நன்றி கூறுகின்றேன். பரிசுத்த வேதாகமத்தில் பிரசங்கி 3:12 இல் "மகிழ்ச்சியாயிருப்பதும்,உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்." இவ்வுலகில் நாம் வாழ்கின்ற வரை கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே நன்மை என்றும் அத்தோடு நாம் வாழ்கின்ற வரை இயேசு கிறிஸ்துவைப் போலவே நன்மை செய்கிறவர்களாவே வாழ வேண்டுமென இவ்வசனத்தில் நாம் கற்றுக் கொள்கிறோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தின் படி இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. என்று உலகத்தில் இரட்சிப்பைப் பெற்ற கர்த்தருடைய ஜனங்களுக்கு விஷேசித்த அறிவித்தலை தேவன் கொடுக்கிறார். இவ்வுலகில் தேவனுடைய வல்லமை, பிசாசின் வல்லமை இரண்டும் செயல் பட்டுக் கொண்டே இருக்கின்றது. தேவ ஜனங்கள் தேவனுடைய வல்லமையால் தேவனுடைய கிருபையிலே சத்துருவானவிடமிருந்து காக்கப்படுகின்றார்கள். சத்துருவானவனின் வல்லமை இயேசுவின் வல்லமையால் நிர்மூலமாக்கப் படுகிறது. ஆதாம், ஏவாள் இருவரையும் வஞ்சித்த சத்துரு இன்றும் உலகத்தில் காத்தருடைய பிள்ளைகளை வஞ்சித்து வீழ்த்த வகை தேடிக்கொண்டே இருக்கின்றான். உபாகமம் 28ம் அதிகாரத்தில் உமக்கு ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் குறித்துச் சொல்லி எச்சரிக்கின்றார். நாம் தேவனின் கட்டளைகளைக் கைக்கொண்டால் நாம் பெறும் ஆசீர்வாதங்களையும், அதேவேளை தேவனின் கட்டளைகளுக்கு செவிகொடாமற் போனால் பெறும் சாபங்களையும் வலியுறுத்திச் சொல்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டு பரிசுத்தமடைகின்றோம். இயேசு நமக்காகச் சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்களாக்கி மீட்டுக் கொண்டார் என கலாத்தியர் 3:13 இல் எழுதப்பட்டிருக்கின்றது.

தேவ பிள்ளைகளே நீங்கள் கலங்காதிருங்கள். எம்மீட்பர் இன்றும் உயிரோடிருக்கிறார். அவர் மீண்டுமாக வரப் போகிறார் என்பதை மாத்திரம் எல்லா வேளையிலும் நினைவிற் கொள்ளுங்கள். தேவன் னமக்குத் தந்த வாழ்வை தேவனுக்கு உகந்த வண்ணமாக பரிசுத்தமாக மாற்றிக் கொள்ளுங்கள். எமது தேவன் பரிசுத்தமாகவே இருக்கின்றார். பரிசுத்தமில்லாமல் அவரைத் தரிசிக்க முடியாது. உலக முடிவு பரியந்தம் எம்மோடு இருக்கின்றார். இதோ சீக்கிரமாக வருவேன் என்பவர் அதிசீக்கிரமாகவே வருவார். அவரைத் தரிசிக்க ஆயத்தமுள்ளவர்களாக மாறுவோம். இன்றைய நாளில் கர்த்தர் உங்களோடிருந்து வெற்றிகரமான நாளாக மாற்றுவார். "வெற்றிகரமான நாள்"



என தேவனே என் பாவங்கள் சாபங்களை நீக்கி என்னை மீட்டுக் கொண்டவரே உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன். நீங்கள் எனக்குத் தந்த இந்த வாழ்வில் பரிசுத்தமாக வாழ்ந்து உங்களை முக முகமாக தரிசிக்கும் பாக்கியத்தை தாருங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். -ஆமென்-

---

இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்,
அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள்;
பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். வெளி: 1:7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுடைய தேவ சபையின் ஜெப நேரங்கள்



## பொதுவான ஜெபங்கள்

**திங்கள் முதல் வெள்ளி வரை ஞாயிறு தினங்களில்.**

* அதிகாலை 04.00 மணி முதல் 06.00 மணி வரை ஊழியர்கள் ஜெபம்.

**திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.**

* காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் ஜெபம்.

**திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.**

* மாலை 02.00 மணி முதல் 04.00 மணி வரை முழு நேர ஊழியர்கள் விசுவாசிகள் இணைந்து ஜெபம்.

**திங்கள் முதல் வியாழன் வரையிலும் சனி ஞாயிறு தினங்களில்**

* இரவு 07.30 மணி முதல் 08.30மணி வரை தேவன் பெற்றுக்கொடுத்த அநுக்கிரத்திற்காக நன்றி பலி ஜெபம்.

## விஷேச ஜெபங்கள்

**திங்கள் கிழமை விஷேச ஜெபம்.**

* காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை தேவன் செய்த நன்மைகள் நிமித்தம் ஸ்தோத்திர பலி ஜெபம்.
* காலை 10.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை ஒவ்வொரு குடும்பமாக குடும்ப ஜெபம்.

**செவ்வாய்க் கிழமை விஷேச ஜெபம்.**

* காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை இலங்கை வாலிபர்களுக்காக சபையில் வாலிப ஜெபம்.
* மாலை 05.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை சபை போதகரின் குடும்ப ஜெபம்.
* ஒவ்வொரு மாதமும் ஒரு செவ்வாய்க்கழமை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் விஷேச ஜெபம்.

**புதன் வெள்ளி தினங்களில் விஷேச ஜெபம்.**

* காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தேசத்தில் ஆத்துமாக்களின் விடுதலைக்காக தண்ணீர் அருந்தாத உபவாச ஜெபம்.

**வியாழன் தினங்களில் விஷேச ஜெபம்.**

* காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை விசுவாசிகளின் குடும்பங்கள் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனி குடும்ப ஜெபம்.

**வெள்ளிக்கிழமை விஷேச ஜெபம்.**

* இரவு 09.00 மணி முதல் அதிகாலை 01.00 மணி வரை சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை வல்லமையாக நடைபெற ஜெபம்
* ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் 24 மணித்தியாலங்கள் உபவாச ஜெபத்தோடு இராவிழிப்பு ஜெபம்.

**சனிக்கிழமை தினங்களில் விஷேச ஜெபம்.**

* காலை 8.00 மணி முதல் காலை 09.30 வரை சுகமளிக்கும் ஆராதனைக்காக ஊழியர்கள் இணைந்து ஒரு மன ஜெபம்

**ஞாயிறு தினங்களில் விஷேச ஜெபம்.**


* காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை துதி நமஸ்கார ஆராதனைக்காக ஜெபம்.

## மேலதிகமான விஷேச ஜெபங்கள்.

* ஒவ்வொரு மாதமும் போயா தினங்களிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் காலை 09.00 மணி முதல் 04.00 மணி வரை உபவாச ஜெபம்.
* வெளி மாவட்டங்களில் சுவிஷேச கூட்டங்கள் நிமித்தம் 21 நாட்கள் உபவாச ஜெபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக."



1 கொரிந்தியர் 15:58

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக !!!

### 22 வது வெளியீடு

தேவ பிள்ளைகளே,

ஜீவ மன்னா தினத்தியானங்களை "22 வது வெளியீடுகள் வரை" வெற்றிகரமாக முன்னோக்கிக் கொண்டு வந்த பரலோகப் பிதாவுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றேன். எல்லா அறிவிலும் விஷேசமான அறிவு தேவனை அறிகிற அறிவாகும். மேலோட்டமாக வேதத்தை வாசிப்பதோடு நிறுத்தி விடாது ஜெபத்துடன் தேவன் பக்கத்தில் அமர்ந்திருந்து அவர் பேசுவதைக் கேட்கும் தேவ ஜனங்களாகும்படி கேட்கின்றேன். எங்கள் ஜீவ மன்னாவிற் கூடாக பெரும்பாலானோர் ஆவிக்குரிய காரியங்களில் பெலனைப் பெற்றுள்ளோம் என எமக்கு நன்றியைத் தெரிவித்து விமர்சனக் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். அத்தோடு நீங்கள் அனைவரும் ஜெபத்தில் எம்மைத் தாங்கி வருகின்றமையால் தொடர்ந்து மன்னா தியானங்களை முன்னோக்கிக் கொண்டு வருவதற்கு இலகுவாக இருக்கின்றமையால் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அன்பார்ந்தவர்களே! இந்த ஜீவ மன்னா தினத்தியானங்களுக்கூடாக பலனைப் பெறுகின்ற நீங்கள் அதிவிரைவாக உங்கள் வாசகக் கட்டணம் ,சந்தோஷமாகக் கொடுக்கும் காணிக்கைகள் எங்களுக்கு அனுப்பி இன்னுமொருவருக்கு ஜீவ மன்னாவைக் கொடுத்து எமக்கு ஒத்தாசை செய்யும் உங்களுக்கு நன்றி. "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகின்றார்கள்" என்னும் பரிசுத்தவேதாகமத்தில் ஒசியா 4:6 இல் கூறியுள்ளதன் பிரகாரம் வேதவசனத்தைக் குறித்து அறிவற்றவர்களுக்கு ஜீவ மன்னா எனும் ஆத்துமீக ஆகாரத்தைக் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். "நீங்கள் எந்த அளவினால் அளக்கின்றீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்று கூறிய தேவனின் பிரதிபலன் உங்களுக்குக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

அன்புமிக்கவர்களே! சுமார் இரண்டுகோடி மூன்று இலட்சம் ஜனங்கள் வாழ்கின்ற எமது இலங்கை நாட்டில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே மன்னாவை வாசிக்கின்றார்கள். ஆத்துமீக பிள்ளைகளில் பெரும்பாலானோருக்கு மன்னா கிடைக்கும் படியாக புது முகவரிகளை எமக்குக் கிடைக்கச் செய்து எதிர்காலத்திலும் உங்கள் ஒத்தாசையை எமக்குத் தருமாறு உங்கள் அனைவரிடத்திலும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். இயேசுக்கிறிஸ்துவின் அநுக்கிரகம் உங்களுக்குக் கிடைப்பதாக! உங்களுக்கு இயேசு துணை!

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ ஊற்றே இயேசுக்கிறிஸ்து உங்களுக்கு மகிமை உண்டாவதாக!

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு இலக்கம்:- CME/003/12/NPO


**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 📱 0714-922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org



இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு 14, ஜீவ மன்னா [illegible] அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org